விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 22 திங்கட்கிழமை (06.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 077

## ஐ.நா # இலங்கை # கால அவகாசம் # த.தே.கூ

# மக்களை ஏமாற்றுகின்ற அந்த ஐவரை அகற்றுங்கள்



### த.தே.ம முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் காட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு கால அவகாசம் கொடுப்பதை த.தே.கூட்டமைப்பில் உள்ள பதினொரு உறுப்பினர்களும் விரும்பவில்லை என்றால், மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கும் ஏனைய ஐந்து உறுப்பினர்களையும் அந்த அமைப்பை விட்டு தூக்கி எறியுங்கள் எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதை செய்யாமல் வெறுமனே கையெழுத்திட்டு எமது இனத்துக்கு நன்மை செய்ய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (23-ம் பக்.)

## சாரதி மீது வாள்வெட்டு

(சாவகச்சேரி)

அரச திணைக்களம் ஒன்றில் சாரதியாக பணியாற்றும் நபரொருவர் தனது கடமை முடிந்து வீடு திரும்பும் வேளையில் இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம்

24ஆம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்பிலவு இராணுவ பாசறை அல்ல! அது நம் பாட்டன்,முப்பாட்டன் ஆண்ட பூமி

### நேற்று 5வது நாளாக மண்மீட்பு போராட்டம் தொடர்வு

(கேப்பாப்பிலவு)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மண் எமது பாட்டன், பூட்டன், முப்பாட்டன் ஆண்ட பூமி. அந்த மண் இராணுவத்தின் பாசறை என எமது ஊரின் பிரதான வீதியை மறித்து பிரமாண்டமாக வாசல் அமைத்து பாரிய படைத்தலைமையகத்தை அமைத்து அங்கே பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரை நிலை நிறுத்தி எமது மண்ணில் உள்ள வருமானம் தரும் வளங்களை எல்லாம் சூறையாடி வருகின்றனர்.

24ஆம் பக்கம் பார்க்க....



## "முற்றுப்புள்ளியா" போர் திரைப்படம்

(சென்னை)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் உண்மை சம்பவங்களை அடிப்படையாக வைத்து "முற்றுப் புள்ளியா" என்ற திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக த டைம்ஸ் ஒப் இந்தியா ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

105 நிமிடங்களைக் கொண்ட திரைப்படத்தை யாழ்ப்பாணத்தை

23ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் துப்பாக்கிகளாலேயே சிறை. பேருந்து மீது தாக்குதல்!

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க தகவல்

(மகரகம)

பயங்கரவாதிகள் பயன்படுத்திய துப்பாக்கிகள் தற்போது பாதாள உலக குழுவினரிடம் இருப்பதாக பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.


மகரகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

களுத்துறை பகுதியில் சிறைச்சாலை பேருந்து மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்திய

23ஆம் பக்கம் பார்க்க....

## செப்டெம்பரில் ஆட்சி மாற்றம் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி!

### கூட்டு எதிரணி அதீத நம்பிக்கை



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள்எதனையும்நிறைவேற்றவில்லை. மாறாக மக்கள் எதிர் பார்த்த மாற்றத்திற்கு நேரெதிராகவே செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

எனவே மக்களின் ஆதரவுடன்

24ஆம் பக்கம் பார்க்க....

## அரச கட்டுப்பாட்டில் சைட்டம் – ராஜித

(கண்டி)

சைட்டம் நிறுவனத்தின் மாணவர்களுக்கு செயற்பாட்டுப் பயிற்சி வழங்கும் வைத்தியசாலையை அரசின் கட்டுப்பாட்டில் எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று கண்டியில் வைத்து தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் அஸ்கிரிய பீடாதிபதியை

23ஆம் பக்கம் பார்க்க....

## இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்



### ஐ.நா பிரதிநிதி ரீட்டா ஐசாக் வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கையில் நீடிக்கும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமெனவும் சமஷ்டி முறையின் கீழ் இவ்வாறு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமெனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுபான்மையின மக்கள் தொடர்பான பிரதிநிதி ரீட்டா ஐசாக் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டிய 24 விடயங்களையும் அவர் பரிந்துரைத்துள்ளார்.

10ஆம் பக்கம் பார்க்க....

## பொறியில் சிக்கிய மகிந்த அரசியலில் குத்துக்கரணம்!

### இராஜாங்க அமைச்சர் நிரோஷன் அறிக்கை

(கொழும்பு)

அரசியல் பொறிக்குள் சிக்கியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தற்போது இருவேறு அரசியலில் ஈடுபட்டு வருவதாக பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து விசேட அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்ட போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரை தொடர் சேவையாற்ற விடுங்கள்

## கொக்குவில் இந்துவில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரை தொடர்ந்தும் சேவையாற்ற அனுமதிக்க வேண்டும் என கோரி பாடசாலைச் சமூகத்தால் இன்றைய தினம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளதாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவர் அ. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்

குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய திருமண மண்டபத்தில், பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

அக்கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்படி அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் உள்ள மாகாண பாடசாலைகளில் மிக நீண்டகாலமாக எமது கல்லூரி முதன்மையாக திகழ்ந்து வருகிறது. பாடசாலையில் கடமையாற்றி வந்த முன்னாள் அதிபர் ஓய்வு பெற்றமையை தொடர்ந்து வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் 1AB பாடசாலைக்குரிய அதிபர் பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அதனடிப்படையில் புதிய அதிபராக நியமனம் பெற்ற பஞ்சாட்சரம் கணேசன் கடந்த 23ஆம் திகதி தமது கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். புதிய அதிபர் நியமனத்தில் பாடசாலைச் சமூகம் திருப்தியடைந்திருந்தது.

இந்த நிலையில் வட மாகாண சபையினால் குறித்த அதிபரை அந்த பதவியில் இருந்து நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட சில செயற்பாடுகள் எமது கல்லூரிக்கு பேரிழப்பாக அமைந்துள்ளது.

கல்வித் தரத்தினை விடவும் ஆளுமை உள்ள அதிபரே எமது கல்லூரிக்கு தேவை. அந்தவகையில் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரே எமது கல்லூரியை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்வார் என நம்புகிறோம். வினைத்திறனான அதிபரை நியமிப்பது எமது கடமையும் ஆகும்.

அந்தவகையில் பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் நேற்றுக் கூடி குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

அதாவது வட மாகாண கல்வி அமைச்சின் முடிவை கண்டித்து இன்றைய தினம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் இன்றைய தினம் பாடசாலை மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல், பெற்றோர்களும் பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் இணைந்து பாடசாலை வளாகத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

உரிய தீர்வை வழங்காத பட்சத்தில் நாளை தொடக்கம் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தால் வட மாகாண சபை முன்றலில் தொடர் போராட்டம் முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளோம்.

எனவே குறித்த விடயத்தில் வடமாகாண முதலமைச்சர் மற்றும் வட மாகாண கல்வி அமைச்சர் கூடிய கவனம் செலுத்தி எமது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# காணாமல்போனோர் கவனயீர்ப்பு; பரந்தன் மக்கள் நேற்று ஆதரவு




(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் அவர்கள் தொடர்பான தகவல் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பரந்தன் மக்களும் அவர்களுடன் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் பதினான்காவது நாளாகவும் நேற்று தொடர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-312)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிவது குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிர்ப்பு



(கொழும்பு)

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு கொழும்பில் நேற்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அகில இலங்கை மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் சங்கத்தினர், காலி முகத்திடலிலிருந்து தமது எதிர்ப்பை ஆரம்பித்தனர்.

மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் உள்ளிட்ட புதிய வர்த்தமானி கடந்த 23ஆம் திகதி, போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் வெளியிடப்பட்டது.

இதன்படி, மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் தலைக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டது.

தலைக்கவசம் அணியும் போது பட்டியொன்றின் ஊடாக அதனை இறுக்கி அணிய வேண்டும் என்பதுடன் முகம் தெளிவாக தெரியும் வ கை ய ி ல அதனை அணிய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தலைக்கவசத்தின் எந்தவொரு பகுதியும், முகத்தின் எந்த வொரு பகுதியையும் மறைக்கும் வகையிலோ, சந் தேகத்தை ஏற படுத் தும் வகையிலோ அல்லது தெளிவற்ற தன் ை ம ை ய க கொண்டதாகவோ அமைந்திருக்கக் கூடாது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைக்கவசத்தின் 90 வீதமான பகுதி ஒரே நிறத்தில் காணப்பட வேண்டும் எனவும் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது, மகஜரில் கையெழுத்திட்ட எதிர்ப்பாளர்கள் பின்னர், பேரணியாக ஜனாதிபதி செயலகம் நோக்கிச் சென்றனர்.

எதிர்ப்பில் ஈடுபட்டவர்களில் சிலருக்கு மாத்திரம் ஜனாதிபதி செயலகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதையடுத்து நாளை மறுதினம் புதன்கிழமை இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக, ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் சதுர லியனகுணவர்தன தெரிவித்தார். (செ-11)

9ம் ஆண்டு நினைவு...



மாமனிதர்
கிட்டினன் சிவநேசன்

1957.01.21 2008.03.06

(முன்னாள் பொது முகாமையாளர், வட மாகாண பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்)
(முன்னாள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்)

உள்ளிருக்கும் அன்பால் உமக்கென்றோர் தடம் பதித்து
வெள்ளை உள்ளத்தினாய் மேடையிலே முழங்கி நின்றாய்
கள்ளமில்லா உன்னுருவம் கரைந்தாண்டு ஒன்பதாயினும்
உள்ளம் மறக்குமோ உன்செயலையும் சொல்லையும்!

அன்னாருடன் சாவடைந்த சாரதி
பெரியண்ணன் மகேஸ்வரராசா
அவர்களையும் நினைவுகூருகின்றோம்

குடும்பத்தினர்

(8126)

**Immediate Vacancies for the post of receptionist in a class hotel**

Male / Female

First priority will be given to,

- Experience persons in similar capacity
- Preferred with knowledge of speaking three languages
- Must be fluent in Sinhala and English
- Must be a self decision maker

" Time is gold for all "

**For more details please contact : 0759396600**

**தேவை**

**யாழ்.நகரின் பிரபல்ய ஆடம்பர விடுதி ஒன்றிற்கு வரவேற்பாளர் தேவை. (ஆண், பெண் - இருபாலாரும்)**

01. அனுபவம் பெற்றவருக்கு முதல் இடம்.
02. முப்பாசை தெரிந்தவருக்கும் முதல் இடம்.
03. அல்லது முழுமை தமிழ், ஆங்கிலம், பேச, எழுத படிக்க தெரிந்தவர்கள்.
04. அல்லது முழுமை சிங்களம், தமிழ், ஆங்கில பேச்சு அறிவு உள்ளவர்கள்.

**குறிப்பு :** மேற்கூறிய கட்டுக்கோப்புக்குள் அடங்கியவர்களும், தானாவே முடிவு எடுக்கக்கூடியவரும் மட்டுமே, நேர்முகப் பரீட்சைக்கு வரலாம்

**(நேரம் எல்லோருக்குமே பொன்னானது)** (சி-7538)

# பொலிஸ் அதிகாரப் பகிர்வு ஆவாகுழு உருவாக வித்திடும்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

**பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் செயற்பாடு, யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட ஆவா குழு மற்றும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த சமன் போன்றவர்களின் உருவாக்கத்திற்கு வித்திடுமென மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



தொடர்ச்சியாக வன்முறையான கலவரங்கள் இலங்கையில் ஏற்பட்டதாகவும் மொத்த சனத்தொகையில் 2 தொடக்கம் மூன்று வீதமானவர்கள் அடையாளம் தெரியாத குழுக்கள் மற்றும் வீதியோர குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியில் தங்கியிருக்கும் சில பிரிவினரே பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிருமாறு கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் கலாசாரங்கள் பற்றிய அறிவுள்ள தமிழ் பேசும் அதிகாரிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதே சிறந்த தீர்வு எனவும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

புதிய அரசாங்கம் அவ்வாறான அதிகாரிகளை அதிகளவில் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொலிஸ் அதிகாரங்களை பகிர்வது தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையாது எனவும் தமிழ் பேசுவோரை சேவையில் இணைத்துக்கொள்ள வேண்டும் எனவும்,

இந்தியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திலேயே பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பகிரப்பட்டிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் தற்போது என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பிய சம்பிக்க அங்கு 14 மாநிலங்களில் பயங்கரவாத குழுக்கள் செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## 85 புதிய அரசியல் கட்சிகள் பதிவுக்காக விண்ணப்பம்

(கொழும்பு)

பதிவு செய்து கொள்வதற்காக 85 புதிய அரசியல் கட்சிகள் காத்திருப்பதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய கட்சிகளை. அரசியல் கட்சிகளாக பதிவு செய்து கொள்வதற்கு கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரையில் கால அவ காசம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காலப் பகுதியில் குறித்த கட்சிகள் பதிவிற்காக விண்ணப்பம் செய்துள்ளன.

விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு தேவை ஏற்பட்டால் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர் என தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். வழங்கப்பட்ட கால அவகாசத்தின் பின்னரும் தபால் மூலம் சில கட்சிகள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன.

இவ்வாறு காலம் கடந்த விண்ணப்பங்கள் தொடர்பில் எவ்வாறான நட வடிக்கை எடுப்பது என்பது குறித்து தீர்மானிக்கப்பட உள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கை வழியாக கடத்தப்படவிருந்த பல கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் பறிமுதல்

மதுரை விமான நிலையத்தில் இருந்து இலங்கை வழியாக மலேசியாவுக்கு கடத்தப்படவிருந்த பெருந்தொகையான போதைப் பொருளை மதுரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

மதுரையிலிருந்து இலங்கை வழியாக நேற்று அதிகாலை மலேசியா செல்லவிருந்த இந்திய பிரஜையிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே 9 கிலோ கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. குறித்த போதைப் பொருள் பலகோடி பெறுமதியானது என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வகையான பெறுமதியான போதைப் பொருள் மதுரையில் பறிமுதல் செய்வது இதுவே முதல் முறை என மதுரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த கடத்தல் சம்பவத்துடன் சர்வதேச கடத்தற்காரர்கள் தொடர்பு பட்டுள்ளனரா என்பது தொடர் பில் அந்நாட்டு பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையோருக்கு சிறைக்குள்ளேயே விசாரணை நடத்த யோசனை

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவினர் மற்றும் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களின் வழக்கு விசாரணைகளை சிறைச்சாலைக்குள்ளேயே நடத்துவதற்கான நீதிமன்ற பிரிவு அமைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை மற்றும் நீதித்துறையின் உயர் அதிகாரிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பின் போதே இந்த யோசனை முன்வைக்கப் பட்டது.


கல்கிசை நீதிமன்ற வளாகத்தில் ஆயுதம் மீட்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலை வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் என்பவற்றினை கருத்தில் கொண்டே இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

இதேவேளை சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பொலிஸ் விசேட படையணி பயிற்சிகள் வழங்குதல் பற்றிய யோசனையும் முன்வைக்கப்பட்டது.

மேலும், பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புகொண்டு சிறையில் உள்ளவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வெளியே அழைத்துச் செல்லப்படும் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந் துரையாடப்பட்டது. (இ-7)

## இலங்கையில் 2 மாதங்கள் இந்தியக் கப்பல் பயிற்சி

இந்திய கடற் படைக்கு சொந்தமான I.N.S. தர்ஷன் என்ற கப்பல் இலங்கையில் இரண்டு மாதங்கள் பயிற்சியில் ஈடுபடவுள்ளது.



இந்த கப்பல் நேற்றுக் காலை விசாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை நோக்கி புறப்பட் டுள்ளது.

இந்திய கடற்படை கப்பலில் இந்திய கடற்படையினர், இலங்கை கடற்பரப்பில் இலங்கை கடற்படையினருடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடவுள்ளனர்.

மேலும் தர்ஷன் என்ற இந்த கப்பல் கொழும்பு மற் றும் காலி துறைமுகங்களுக்கும் செல்லவுள்ளது. (இ-7)

## கடற்படையின் கார் மோதி 12 வயது மாணவன் பலி!

கடற்படையினர் வந்த கார் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கஹட்ட கஸ்திகிலிய பிரதேசத்தில் நேற்று அதிகாலை மோதிக் கொண்டதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 12 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


மோட்டார் சைக்கிளில் சென்ற சிறுவனின் தாய் காயமடைந்துள்ளதாகவும் கடற்படையினர் வந்த கார் மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்ட போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. சிறுவன் காயமடைந்த நிலையில் தம்மல்னேவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அநுராதபுர வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போது உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)


# ரென்ஷா, ஷோன் மார்ஸ் அரைச்சதம்
# அவுஸ்திரேலியா முன்னிலையில்

பெங்களூரு டெஸ்டில் 2-வது நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலியா 6 விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்கள் சேர்த்துள்ளது. தற்போது வரை 48 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் பெங்களூருவில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 189 ஓட்டங்களில் சுருண்டது. பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா நேற்றைய முதல் நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. வோர்னர் 23 ஓட்டங்களுடனும், ரென்ஷா 15 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய வோர்னர் 33 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். ஆனால் ரென்ஷா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.





அணித் தலைவர் ஸ்மித் 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜடேஜா பந்தில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்து ஷோன் மார்ஷ் ரென்ஷாவுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரும் அரைசதம் அடித்தனர். ரென்ஷா 60 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், ஷோன் மார்ஷ் 66 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டம் இழந்தனர்.

இருவரின் ஆட்டத்தால் அவுஸ்திரேலியா 2-வது நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்கள் எடுத்துள்ளது. வேட் 25 ஓட்டங்களுடனும், ஸ்டார்க் 14 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

தற்போது வரை அவுஸ்திரேலியா 48 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. கைவசம் நான்கு விக்கெட்டுக்கள் உள்ளன. அந்த அணி 100 ஓட்டங்களுக்கு மேல் முன்னிலைப் பெற்றால் இந்த டெஸ்டிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற வாய்ப்புள்ளது.

## டுபாய் ரெனிஸில் முர்ரே சம்பியன்



துபாய் டென்னிஸ் போட்டி இரட்டையர் பிரிவில் ரோகன் போபண்ணா (இந்தியா) மார்சின் மேட் கோவ்ஸ்னி (போலந்து) ஜோடி 6-4, 3-6, 3-10 என்ற செட் கணக்கில் ஜ"லியன் ரோஜர் (நெதர்லாந்து) ஹோரியா டெகாவ் (ருமேனியா) இணையிடம் தோற்று சாம்பியன் பட்ட வாய்ப்பை நழுவ விட்டது.

ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் நம்பர் வன் வீரர் இங்கிலாந்தின் அன்டி முர்ரே 6-3, 6-2 என்ற நேர் செட்டில் பெர்னாண்டோ வெர்டஸ் கோவை (ஸ்பெயின்) வீழ்த்தி பட்டம் வென்றார்.

23 ஆண்டு கால துபாய் டென்னிஸ் வரலாற்றில் இந்த பட்டத்தை இங்கிலாந்து வீரர் ஒருவர் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

# ஹோலியின் எதிர்மறையான சிந்தனை ஏனைய வீரர்களையும் ஒட்டிக்கொண்டது



இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலியின் எதிர்மறையான சிந்தனை, அணியின் மற்ற வீரர்களுக்கும் தொற்றிக் கொண்டு இந்தியாவை பாதித்துவிட்டது என மார்க் வோ குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திய அணி தலைவர் விராட் ஹோலி அவுஸ்திரேலியாவிற்கு எதிரான தொடரில் மிகவும் மோசமாக விளையாடி வருகிறார். முதல் டெஸ்டில் 0, 13 ஓட்டங்கள் எடுத்த அவர், தற்போது நடைபெற்று வரும் 2-வது டெஸ்டில் 12 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

அவரது மூன்று வகையான ஆட்டம் இழப்பும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். முதல் இன்னிங்சில் வெளியே சென்ற பந்தை அடித்து ஆட்டம் இழந்தார் அவர், அடுத்த இரண்டு இன்னிங்சிலும் பந்தை எதிர்கொள்ளா மலேயே ஆட்டம் இழந்தார்.

முதல் போட்டியில் மோசமாக தோல்வியடைந்த பிறகு, "எப்படி விளையாடக்கூடாது என்பது புனே ஆட்டம் ஒரு எடுத்துக்காட்டு. இது போன்று ஒருபோதும் விளையாட மாட்டோம்" என்று கூறினார். ஆனால் பெங்களூருவில் நடைபெற்று வரும் 2-வது போட்டியில் இந்தியா 189 ஓட்டங்களில் சுருண்டது.

இந்தியாவின் மோசமான ஆட்டத்திற்கு விராட் ஹோலியின் எதிர்மறையான சிந்தனைதான் காரணம் என்று அவுஸ்திரேலிய அணியின் தேர்வாளரும், முன்னாள் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மார்க் வோ குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும் இதுகுறித்து மார்க் வோ கூறுகையில் "பெங்களூரு டெஸ்டில் இந்தியாவின் செயல்பாடு, புனே டெஸ்ட் தோல்விக்குப் பிறகு இந்திய அணி தலைவர் விராட் ஹோலி கூறியதற்கு எதிர்மறையாக உள்ளது. அவரது மூளை மங்கிவிட்டது. இரண்டு பீல்டர்களை இடது பக்கம் நிறுத்திய பின், லயனின் பந்து பவுன்சர் ஆவதற்கு முன் ஹோலி யின் துடுப்பை தாக்கும் என்பது எனக்குத் தெரியும்.

அதிக அளவு நோக்கத்துடன் இந்த போட்டியில் விளையாட வேண்டும் என்று ஹோலி தனது பார்வையில் இருந்து கூறியிருந்தார்.

விராட் ஹோலி எதிர்மறையான எண்ணத்துடன் சிந்தித்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் துடுப்பாட்ட வீரரை சுற்றி அதிக அளவில் பீல்டர்கள் உள்ளனர். பந்து பவுன்சர் ஆகினால் பந்து இன்சைடு எட்ஜ் ஆகும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். ஒரு துடுப்பாட்ட வீரர் இப்படி நினைக்கவே கூடாது. அவரால் அடிக்க முடியும் என்றால், அவனது தூக்கத்தில் கூட பந்து ஓட்டமாக முடியும்.

விராட் ஹோலி உண்மையிலேயே கொஞ்சம் நேர்மறையான சிந்தனையுடன் உள்ளார். அது அவரது சக அணி வீரர்களையும் ஒட்டிக்கொண்டது. பெங்களூரு முதல் நாள் ஆட்டத்தில் அவர்கள் வந்ததும் சென்றதுமாகவே இருந்தது. இந்திய துடுப்பாட்ட வீரர் அவுட்டானது குறித்து அவர்களை நினைத்து பார்த்தால், மிகவும் ஏமாற்றம் அளிக்கக் கூடியதாக இருக்கும்" என்றார்.

# அவுஸ்திரேலியாவின் இரண்டு சுழல்களும் ஆதிக்கம் செலுத்துவது ஆச்சரியம்

## கங்குலி தெரிவித்தார்



இந்தியாவிற்கு எதிரான தொடரில் அவுஸ்திரேலியாவின் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்துவது ஆச்சரியம் அளிக்கிறது என்று கங்குலி தெரிவித்துள்ளார்.


இந்திய அணியின் முன்னாள் தலைவர், மேற்கு வங்காள கிரிக்கெட் சங்கத்தின் தலைவருமான கங்குலி, முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷிப் ஷங்கர் பாலின் அக்கடமியை திறந்து வைத்தார்.

அப்போது கங்குலி கூறுகையில் தற்போது நடைபெற்ற வரும் டெஸ்ட் தொடரில் இரண்டு முனைகளில் இருந்தும் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர்கள் கடும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறார்கள்.

இந்த யுக்தியை இதற்கு முன் இந்திய அணிதான் செய்து வந்தது. அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் இப்படி நெருக்கடி கொடுத்ததை நான் பார்த்ததே இல்லை என்றார்.

புனேயில் நடைபெற்ற முதல் டெஸ்டில் ஓகீபே 12 விக்கெட்டும், தற்போதைய பெங்களூரு டெஸ்டில் நேதன் லயன் முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுக்களும் சாய்த்தது குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்திய தீவுகள் - பாகிஸ்தான் தொடரில் இருபது - 20 போட்டி நான்காக அதிகரிப்பு




பாகிஸ்தான் அணி மேற்கிந்திய தீவுகளுக்கான சுற்றுப் பயணம் செய்து இருபது - 20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாட இருக்கிறது. இரண்டு போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் முதலில் நடக்கிறது. தற்போது இரண்டு போட்டிகள் கொர்ண்ட இந்த தொடரில் கூடுதலாக இரண்டு போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி முதல் இருபது - 20 போட்டி மார்ச் 31ஆம்திகதியும், ஏப்ரல் 2ஆம் திகதி 2-வது போட்டியும் நடைபெறும் வகையில் அட்டவணை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது மார்ச் 31ஆம்திகதிக்கு பதில் 26ஆம் திகதி தொடர் தொடங்குகிறது. முதல் போட்டி 26ஆம் திகதியும், 2-வது போட்டி 30ஆம் திகதியும், 3-வது போட்டி 31ஆம் திகதியும், 4-வது மற்றும் கடைசி போட்டி ஏப்ரல் 01ஆம்திகதியும் நடக்கிறது.

மார்ச் 25ஆம்திகதி மற்றும் 26ஆம்திகதியில் பிளோரிடாவில் இரண்டு போட்டிகளை நடத்த மேற்கிந்திய தீவுகள் திட்டமிட்டிருந்தது. அங்கு நடத்த சாத்தியமில்லாததால் தற்போது அட்டவணை மாற்றப்பட்டுள்ளது.

# தந்தையின் கனவு பலிக்கவில்லையென மைதானத்தில் கண்ணீர் விட்ட வீரர்



பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் அரையிறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற பின்னர் பாகிஸ்தான் அணி வீரர் வஹாப் ரியாஷ் கண்ணீர் விட்டு அழுத சம்பவம் ரசிகர்களை நெகிழ வைத்துள்ளது. இத்தொடரில் பேஸ்வர் சல்மி அணிக்காக விளையாடிய வஹாப் ரியாஷ் சிறப்பாக பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்நிலையில் போட்டி முடிந்து வீரர்கள் மைதானத்தை விட்டு வெளியேறிய போது வஹாப் ரியாஷ் கண்ணீர்விட்டு அழுதார்.

பாகிஸ்தான் சுப்பர் லீக் ஆரம்பிக்க இருந்த சில நாட்களுக்கு முன்னர் வஹாப் ரியாஷின் தந்தை இறந்துவிட்டார்.

அவர் இறப்பதற்கு முன்னர் வஹாப் ரியாஷிடம், பாகிஸ்தான் சுப்பர் லீக் இறுதிப்போட்டியில் நீ லாஹூர் மைதானத்தில், நமது மக்களுக்கு முன் விளையாடுவதை பார்க்க வேண்டும். அது என் கனவு என தெரிவித்தாக வஹாப் கூறினார்.

இந்நிலையில் போட்டியில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றிருந்தாலும், தனது தந்தை இல்லையே என்ற ஏக்கம் அவரது கண்களில் கண்ணீராக பொழிந்தது.

# சுதந்திரக்கட்சியின் தீர்மானம் குறித்து கூடி ஆராய கூட்டு எதிர்க்கட்சி முடிபு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அண்மையில் நடத்திய அகில இலங்கை மத்திய செயற் குழுக் கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானங்கள் தொடர் பில் சந்தித்து கலந்துரையாட கூட்டு எதிர்க்கட்சியில் அங் கம் வகிக்கும் அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பின ர்கள் முடிவு செய்துள்ளனர்.

அடுத்த வாரம் ஒன்று கூடி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் தொடர் பாக இவர்கள் கலந்துரை யாடவுள்ளனர்.

கட்சியின் பணிகளில் நேரடியாக பங்களிப்பு வழங் காத தொகுதி அமைப்பாளர் களை நீக்குவது என சுதந் திரக் கட்சி எடுத்துள்ள முடிவு குறித்து இதன் போது கலந்து ரையாடப்படவிருப்பதாக கூற ப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரவளித்து வரும்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களான மகிந்தானந்த அளுத்கமகே, குமார வெல்கம மற்றும் சில மாகாணசபை உறுப்பினர் கள் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பா ளர்களாக பதவி வகித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இவர்க ளையும் தொகுதி அமைப்பா ளர் பதவிகளில் இருந்து நீக்கிவிட்டு புதிய அமைப்பா ளர்களை நியமித்து, அவர்க ளிடம் நேரடியான பங்களி ப்பை கட்சிக்கு பெற்றுக்கொ ள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அரசியல் தர ப்பில் பேசப்படுகிறது. (இ-7)

# புதிய யாப்புக்கு சர்வஜன வாக்கெடுப்போ மூன்றில் இரண்டோ தேவையில்லை

(கொழும்பு)

உத்தேச அரசியலமைப் புக்கு சர்வஜன வாக்கெடுப் பொன்றை நடத்தாதிருப்பதற்கு பெரும்பாலும் சாத்தியப்பாடுள்ள தாக அரசாங்க தரப்பு வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, நோக்குகையில் புதிய அரசியலமைப்பு என்பது சிறியசீர்திருத்தங்களைக்கொண்ட ஒரு யாப்பையே குறிப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பாராளுமன்றத்தில் மூன் றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவோ,? சர்வஜன வாக்கெ டுப்போ? தேவையற்றது எனவும் சீர்திருத்தங்களையே யாப்பில் மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

# யாழ். கலாலயா பயிற்சியகத்தின் 32 வது ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வின் மேலும் சில பதிவுகள்...



(சி-7726)

யாழ்ப்பாணம் விக்ரோரியா வீதியில் அமைந்துள்ள யாழ் கலாலயா பயிற்சி யகத்தின் 32வது ஆண்டு விழா மற்றும் சான்றிதழ் வ்ழங்கும் நிகழ்வில் லண்டன் ஜேடி என்ரபிறைசஸ் அழகு சாதனப் பொருட்கள் கேக் உள்ளீடுகள் விநியோக நிறுவன இயக்குநர் திரு. ஜீ.எம்.ராஜ்குமார் அவர்கள் உரையாற்று வதையும் கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் பயிற்சிகளில் அதிகூடிய புள்ளிகள் பெற்று 2016C பிரிவின் சிறந்த மாணவியாக தெரிவு செய்யப்பட்ட செல்வி கலியுகவரதன் கபிலயா அவர்களுக்கு பயிற்சி நிலைய இயக்குநர் மா.சுதர்சன் அவர்கள் நினைவுப் பரிசில் வழங்கு வதையும் அருகில் பயிற்சி நிலைய ஆசிரியைகள் நிற்பதனையும் பயிற்சியை நிறைவு செய்த கேக் ஐசிங், உணவு தயாரித்தல், facial, கூந்தல் அலங்காரம், உடை தயாரித்தல் பயிற்சிகளைப் பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட மாணவிகளையும் இயக்குநர் அவர்களால் ஆண்டுவிழாக் கேக் ஆசிரியைகளுக்கு பரிமாறப்படுவ தனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர் களையும் காணலாம்.

# இராசி பலன்

06.03.2017
(மாசி 22, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
நவமி பின்னிரவு 3.55 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 9.31 மணிவரை
சுபநேரம் 12.25-1.55 மணிவரை
இராகுகாலம் 7.55-9.25மணிவரை
கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூசை,
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | செவ் | சந் | |
| சூரி கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம், அனுசம்<br>காலை 9.45 மணிக்கு<br>மிது-சந் | | |
| | | | ராகு |
| | சனி | குரு | |

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம் பெற லாம், பகையொன்று நட்பாக லாம்.

**இடபம்** தொலைபேசி வழியில் கிடை க்கும் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரி யும், வியாபார விருத்திக்கு வித் திடுவீர்கள், புண்ணிய காரியங் களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் கூடும், விலை உயர்ந்த பொருட் களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள், சயன சுகக்குறைவுகள் ஏற் படலாம்.

**சிம்மம்** தொழிலில் முன்னேற்றங்கள் ஏற்படலாம், இல்லத்தில் இனிய காரியங்கள் நடைபெறு வதற் கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** காலை நேரத்திலேயே கல கலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் களை வாங்கி மகிழ்வீர்கள், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங் களிடம் உதவி கேட்டு வர லாம், வெளியூர் பயணங்களால் ஆதாயம் கிடைக்கும், தந்தை வழி உறவில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.


**விருச்சிகம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பய ணங்களால் பயனுண்டு, எடு த்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள் , நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், பயணங்களால் பயனு ண்டு, புதிய பொருட்சேர்க் கையுண்டு.

**மகரம்** உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெற லாம், சேமிப்பு உயரும்.

**கும்பம்** பிள்ளைகளின் சுபகாரியங் களை நிகழ்த்தும் எண்ணம் உரு வாகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பூமி சம்பந் தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**மீனம்** உறவினர்கள் வழியில் அன் புத்தொல்லைகள் ஏற்பட லாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர் கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.






தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் வருடாந்த தேசிய மாநாடும் பொதுக்கூட்டமும் நேற்றைய தினம் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. கட்சிக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமான மாநாடு மற்றும் பொதுக்கூட்டம் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு பின்னர் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கட்சி உறுப்பினர்களின் உரைகளும் இடம்பெற்றன. வடக்கு கிழக்கில் இருந்து கட்சியின் நிர்வாக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# ஜனாதிபதி செயலணி குறித்து யாழில் கருத்தமர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மக்கள் தொடர் பாடல் மற்றும் ஜனாதிபதி வலையமைப்பு செயலணி தொடர்பான கருத்தமர்வுக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பி.ப3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர்கூட மண்டபத்தில் ஜனாதிபதி செயலகப் பணிப்பாளரும் ஊடக அமைப்பாளருமான சட்டத்தரணி ரவிரட்ன வேல் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி செயலகத்தினால் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்றிட்டங்களும் தொடர்பில் இலங்கையிலிருந்து வறுமையை இல்லா தொழிப்பதற்கான செயற்றிட்டம், போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விசேட ஜனாதிபதி செயலணி சிறுநீரக நோய் நிவாரணம் தொடர்பான விசேட ஜனாதிபதி செயலணி, ஜனாதிபதி யிடம் தெரிவிக்க செயற்றிட்டம் என்பன தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இதற்கான விளக்கங்களை ஜனாதிபதி செயலக தொடர்பாடல் செயலாளரும் சட்டத்தரணியுமான சிரமன் லத்தீப் தெரியப்படுத்தினார்.

ஜனாதிபதியின் ஒரு வருட பதவிக்காலத்தை முன்னிட்டு 2016.01.08ஆம்திகதி ஜனாதிபதியிடம் தெரிவிக்க செயற்றிட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

அரசாங்கசேவை வழங்கல் செயற்பாட்டைப் பலப்படுத்தி மக்களின் பிரச்சினைகள், மனக்குறைகள்,கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை வினைத்திறனான முறையிலும் எளிமையாகவும் ஜனாதிபதியிடம் முன்வைப்பதற்கும் அவற்றின் பதில்களை, தீர்வுகளை துரிதமாகவும் உற்பத்திப் பெருக்கமான முறையிலும் பெற்றுக்கொடுப்பதற்கும் வசதிகளை வழங்குதல் இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

கிடைக்கும் முறைப் பாடுகள் ஜனாதிபதி அலுவலகத்தின் மக்கள் தொடர்பு பிரிவினரால் பரிசீலனை செய்யப்படுவதுடன் அந்த முறைப் பாடுகள் மனக்கு றைகள் தொடர்பான மேலதிக நடவடிக்கை களுக்காக உரிய அமைச்சுகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேற்படி அனைத்து நடவடிக்கைகளும் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கணனித் தரவுக் கட்டமைப்பினூடாக வினைத்திறன் மிக்க முறை யில் நடைமுறைப்படுத்தப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-254)

# மக்களின் பிரச்சினைகளை கேட்கக்கூட முடியாத ஜனாதிபதியின் அறம் என்ன?

## வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கேள்வி

போராடிக் கொண்டிருக் கும் வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் குடும்ப உறவுகளையும் வேலையற்ற பட்டதாரிகளையும் ஜனாதிபதி யாழ் விஜயத்தில் சந்திக்காமை கண்டிக்கத்தக்கது. தன்னை பதவிக்குக் கொண்டுவந்த தமிழ் மக்களின் பிரச்சினையில் அவரது கரிசனை கேள்விக்குட்படுகின்றது. மகிந்த ராஜபக்ஷவின் அச் சுறுத்தல்களையும் தாண்டி வாக்களித்த சமூகங்களுக்கு ஜனாதிபதி செய்யும் நன்றிக் கடன் இதுவா? என்ற அரசியல் ஒழுக்கம் சார்ந்த வினாவை யும் தொடுக்கத் தூண்டுகின் றது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

ஆளுநர் அலுவலகத்தில் "ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" என்ற அலுவலகம் திறக்கப்பட்டபோதே அங்கு தமது பிரச்சினைகளுக்காக சென்ற மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். எனவே சர்வதேசத்திற்கும் தமிழ் மக்களின் பிரச்சினையினை அணுகுவதாகக் காட்டிக் கொண்டு மக்களின் பிரச்சினையினை அணுகாத அரசாங்கத்தின் இரட்டை வேடம் இதிலிருந்து தெரிகின்றது.

'இன்றைய ஜனாதிபதியை, பதவியில் இருந்த மகிந்த ராஜபக்ஷவின் நெருக்கடிகளையும் தாண்டி தமிழ் மக்கள் வாக்களித்தே தெரிவு செய்தவர்கள். அன்று தேர்தல் பிரசாரத்தின் போது மைத்திரியை ஆதரிப்பது என்பது கடும் அச்சுறுத்தல் மிகுந்த ஒன்றாகவே இருந்தது. இந்த அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு தமது உரிமை களை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரை பதவிக்குக் கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையிலேயே மைத்திரிக்கு நாம் வாக்களித்தோம். சில சமயம் தமிழ் மக்கள் வாக்களிக்காதிருந்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று கம்பி எண்ணியிருக்க வேண்டும். ஒரு சமயம் அவ்வாறு நடைபெற்றிருந்தால், தன்னால் இரக்கம் காட்டப்படாது இன்றும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலையை கண்டு அவர் வெதும்பியிருப்பார்.

இதில் சரத் பொன்சேகாவின் வாழ்க்கையினை அவர் புரட்டிப் பார்க்க வேண்டும்.

இத்துடன் மைத்திரியைக் கொண்டுவர எத்தனித்த தமிழ் மக்கள் மீது ஒருவேளை மகிந்த வென்றிருந்தால் என க்கு எதிராகப் போட்டியிட்ட வரை ஆதரித்தீர்கள் என ஆவேசம் கொண்டு இராணுவத்தினரை தான் அவர் ஏவியிருப்பார். வேட்பாளர் மைத்திரிக்கு ஆதரவாக தீவகத்தில் நான் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது எனது வாகனம் கூட மகிந்த ராஜ பக்ஷவின் அடியாட்களால் அடித்து நொருக்கப்பட்டது. இதற்கு ஊர்காவற்றுறை நீதி மன்றின் பதிவுகள் சாட்சியா கும். இது எல்லாவற்றினையும் தெரிந்துகொண்டு, சூழவையும் எதிர்கொண்டே எங்கள் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்றே மைத்திரியை பதவிக்குக் கொண்டு வந்தோம். இவை பற்றியாவது ஜனாதிபதி மைத் திரிக்கு புரிந்துணர்வு இல்லையா எனக கேட்கத்தோன்றுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)




யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனத்தினால் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு அண்மையில் நடைபெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன், யாழ் எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பாலுக்கு மாலை அணிவித்து "கலைமாமணி விருது" வழங்குவதை படத்தில் காணலாம்.

# வாள்வெட்டு சம்பவம்; இருவருக்குக் காயம்

மீசாலை சோலையம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கோவிலடிப்பகுதியில் நின்ற இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதிலேயே வாள்வெட்டில் முடிந்தது. இதில் படுகாயமடைந்த இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி வடக்கு சோலையம்மன் கோவிலடியை சேர்ந்த ஜெயரட்ணம் பிரசாத் வயது 31, சாவகச்சேரி வடக்கு மடத்தடியை சேர்ந்த சின்னையா ஜெயக்குமார் வயது 37 ஆகிய இருவருமே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-89)



இலங்கை மின்சார சபையால் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்து காங்கேசன்துறை புகையிரத நிலையம் வரையான கே.கே.எஸ் வீதியில் பிரதான மின்கம்பிகள் துருப்பிடித்து காணப்படுகின்றமையால் அதனை மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (படம்:-தெல்லிப்பளை செய்தியாளர்)






யாழ்.சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் ம.குணபாலன் தலைமையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர் ஒலிம்பிக் சுடரேற்றி வைப்பதையும் இடைவேளை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாவிச் செய்தியாளர்)

# புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாகாது

## ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக அமைச்சர் விஜயமுனி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்புத் திருத்தமே அன்றிய, புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு மற்றும் மத்திய செயற்குழு ஆகியவற்றிடம் உறுதியளித்துள்ளதாக அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

கொழும்பு 7 இல் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு மற்றும் மத்திய செயற்குழு கூட்டத்தில் ஜனாதிபதி இதனை தெளிவாக கூறியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதியின் இந்த முடிவை நிறைவேற்றுக்குழு மற்றும் மத்திய செயற்குழு என்பன ஏகமனதாக ஏற்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறியமையானது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருக்கலாம். அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடல்ல எனவும் அமைச்சர் விஜயமுனி சொய்சா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சி நிபந்தனையின்றி பேச வர வேண்டும்

## சு.க.அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் வகிக்கும் அமைச்சுப் பதவிகளை துறந்தாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனியாக ஆட்சியமைக்க முடியாது என அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நிலைமையில் நாம் செய்ய வேண்டியது கட்சியைப் பலப்படுத்துவதாகும். இதற்காக சகலரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஷா, நேற்று முன்தினம் தனியார் ஊடகமொன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு விடுத்த அறித்தல் தொடர்பில் பதிலளிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சகலரும் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலக வேண்டும் என சொய்ஷா எம்.பி. தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துக்கள் தொடர்பில் பதிலளித்த அமைச்சர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு எதிர்க்கட்சி கலந்துரையாடலில் கலந்து கொள்வதாயின் நிபந்தனையின்றி பேச முன்வர வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (இ-7)

# தமது தாயையும் விற்க அரசியல்வாதிகள் தயார்

## சந்திரிகா கடும் விசனம்



மனித நேயம் இல்லாது போய் நாட்டில் மிகவும் ஆபத்தான சமூக நிலைமை உருவாக்கியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நிட்டம்புவ - ஹெர கொல்ல ஒச்சடிவத்தை முஸ்லிம் வித்தியாலத்தின் 25 ஆவது ஆண்டு விழா நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். பணத்திற்கு மாத்திர மல்ல பணத்தை பெற்றுக் கொண்டு எவற்றையும் காட்டிக்கொடுக்கத் தயாராக இருக்கும் சிலர் நாட்டில் இருக்கின்றனர்.

குறிப்பாக அரசியல் வாதிகள் தமது தாயை கூட தட்டில் வைத்து விற்பனை செய்ய தயாராக இருக்கும் காலம் ஏற்பட்டுள்ளது.

நான் ஜனா திபதி யாக பதவி வகித்த காலத்தில் கல்விக்கு விசேடமான இடத்தை வழங்கினேன்.

கல்வியமைச்சருடன் பல மணி நேரம், பல வாரங் கள் கலந்துரையாடி கல்வி மறு சீரமைப்பை ஆரம்பித்து நாட் டிற்குள் கல்வியில் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்த முடிந் தது.

நவோதய திட்டத்தின் கீழ் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா இரண்டு பாடசாலைகள் என்ற கணக்கில் 700 பாடசாலைகளை தெரிவு செய்து கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் யுத்தம் நடைபெற்ற தன் காரணமாக அங் குள்ள பாடசாலைகளில் அதனை மேற்கொள்ள முடியாது போனது. நாங்கள் ஆட்சிக்கு வரும் போது பாடசாலைகளில் அதிபர்கள் இருக்கவில்லை. பெரு ம்பாலானவர்கள் கொழும்புக்கு செல்ல தயாராக இருந்தனர்.

கஷ்டமான துரப்பிரதே சங்களுக்கு சென்று பணி யாற்றிய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட் டது.

இவ்வாறு பாடசாலை களை முனனேற்றி கொண்டு செல்லும் போது அரசாங்கம் மாறியது. தற் போது முதலில் இருந்து ஆரம்பிக்க வேண் டியுள்ளது. தற்போது நாங்கள் கல்வி அபிவிருத்தி பணி களை ஆரம்பித்துள்ளோம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார். (இ-7)


### பெயர் மாற்றம்

உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட துரைராசா செல்வராணி ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் ராணி எனப் பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் துரைராசா செல்வராணி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
(8124) துரைராசா செல்வராணி



ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

### ஸ்ரீ ஸ்ரீமான் கல்கி பகவானின் 69 ஆவது ஜென்மதின வைபவமும் நாம சங்கீர்த்தன பாற்குட பவனியும்



அன்பர்களே!

விஷ்வ சைதன்ய மூர்த்திகளான ஸ்ரீ பரம் ஜோதி அம்மா பகவானின் ஸ்வர்ணயுக ஸ்தாபித மஹாசங்கல்பம் நிறைவேறிக் கொண்டிருக்கும் இப் புண்ணிய யுகத்தில் வாழும் பேறுபெற்ற நாம், ஸ்ரீ ஸ்ரீமான் கல்கி பகவானின் 69 ஆவது ஜென்ம தினத்தை இம்முறையும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பகவத் சங்கல்பம் அமைந்துள்ளது.

ஜென்ம தினத்தன்று காலை 7.30 மணியளவில் நாம் சங்கீர்த்தன பாற்குட பவனியுடன் ஆரம்பமாகும் நிகழ்வானது பாதுகை அபிஷேகம், பக்தி சங்கீர்த்தனம், ஜனன பூஜை மற்றும் சில நிகழ்வுகளோடு நண்பகல் மகேஸ்வர பூஜையுடன் (அன்னதானம்) நிறைவுபெறும். இந்நிகழ்வில் குடும்ப சகிதம் கலந்து கொண்டு ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவானின் அனுக்கிரகத்தைப் பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

இடம்:- இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபம்
(நீராவியடி, யாழ்ப்பாணம்)
காலம்:- 2017.03.07 (செவ்வாய்க்கிழமை) காலை
7.30 மணி முதல்

குறிப்பு:- பாற்குட பவனியில் கலந்து கொள்பவர்கள் காலை 7.30 மணிக்கு முன்னதாக சிறிய செம்பில் பால் நிறைத்துக் கொண்டுவரவும்.

'பகவத் சேவை செய்வோம். நாம் பிறந்த பயனை அடைவோம்...'

ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவான்,
(8122) மாணவசேவா சமித்தி, யாழ்.மாவட்டம்.



### கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 87செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: M.Eng/ பொறியிலாளர் கனடா
தொ.இ: B/7041

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 60 செவ் 1 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/7044

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 62 செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BSc பொறியியலாளர்
தொ.இ: B/7045

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 37செவ் 12 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/7047

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 62 செவ் 7 இல்
உயரம்: 5'2"தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/7056

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 27செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA விரிவுரையாளர்
தொ.இ: G/7060

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 11
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7070

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா:செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில் இந்தியா
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7071

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

## 14 ஆவது நாள்

# எனது தந்தையை நான் பார்த்ததில்லை அவரைக் காண ஆசையாகவுள்ளேன்

### கிளிநொச்சி கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்ற சிறுமியொருவர் கண்ணீர் மல்க தெரிவிப்பு



(மல்லாவி)

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் உறவு மீட்புப் போராட்டம் நேற்று 14 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் இரவு -பகலாக நடைபெற்று வருகின்றது.

தமது உறவுகள் எப்போது வருவார்கள்? அரசு இன்னும் பதிலளிக்கவில்லை. இந்த அரசு பாராமுகமாக இருக்கின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் இனியும் காலம் தாமதிக்க வேண்டாம். இலங்கை அரசுக்கு பொறுப்புக் கூறல் விடயத்தில் ஐ.நா. அவகாசம் வழங்கக்கூடாது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் கண்ணீர் மல்க தினமும் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்காக காத்து இருக்கின்றனர். பிறந்தது முதல் எனது தந்தையை காணவில்லை. இராணுவம் பிடித்து சென்றது. ஜனாதிபதி மாமா எனது தந்தையை விடுதலை செய்யுங்கள். எனது தந்தையை நான் கண்டதில்லை. அவரை நான் பார்க்க வேண்டும் என தந்தையைத் தொலைத்த 9 வயதுச் சிறுமி கண்ணீர் மல்க ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கின்றார்.

குறித்த சிறுமி 6 மாதங்களாக வயிற்றில் இருந்த போது இராணுவத்தினரிடம் சரணடைந்த எனது கணவரை மீட்டு தாருங்கள் என தாயார் கண்ணீர் மல்க தெரிவிக்கின்றாள்.

நேற்றுடன் 14 ஆவது நாளாக தொடரும் இரவு பகல் தொடர் போராட்டத்திற்கு பலரும் ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தங்களுக்கு உறுதியான தீர்வுகிடைக்கும் வரைக்கும் கவனயீர்ப்பு போராட்டத்தை தொடரப் போவதாகவும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (2-15)




## அடிப்படை வசதி கோரி பன்னங்கண்டி கிராம மக்கள் 2வது நாளாகவும் போராட்டம்



(மல்லாவி)

கிளிநொச்சி பன்னங்கண்டி பிரதேச மக்கள் நேற்று இரண்டாவது நாளாக கவன ஈர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த பிரதேசத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தாம் குடியிருக்கும் காணிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும், வீட்டுத்திட்டம், மலசலகூடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

1990ம் ஆண்டு முதல் குறித்த காணியில் வசித்து வரும் தமக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கும் மக்கள், நீண்ட காலமாக குறித்த காணியில் வாழும் எமக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர். குறித்த பிரச்சினைக்கு உரிய தீர்வு எட்டப்படும் வரை தாம் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த காணிகள் மத்திய வகுப்பு காணிகளாக வழங்கப்பட்டுள்ள நிலையில் 1990ம் ஆண்டு காலப்பகுதியில் இவர்கள் அங்கு குடியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது காணி உரிமையாளர் குறித்த காணியை உரிமை கோரி வரும் நிலையில் இம்மக்களிற்கான அடிப்படை வசதிகளையும் காணி உரிமத்தினையும் பெற்றுக் கொடுப்பதில் சிக்கல் நிலை காணப்படுகின்றமையால் இவர்களிற்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுப்பதில் சிக்கல் நிலை உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

## காணாமல் போன சிறுமி

### வவுனியாவில் உறவினர் வீட்டில் தங்கியிருப்பதாக பொலிஸில் முறைப்பாடு

தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்று 16 வயது நிரம்பிய சிறுமியொருவர் வீடு திரும்பாத நிலையில் நேற்று முன்தினம் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் இரவு 8.30 மணியவில் அவரது சகோதரியால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இதனையடுத்து தெல்லிப்பழைபொலிஸ் நிலையத்தால் தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.


இது தொடர்பில் தெரிய வருவதாவது,

தெல்லிப்பழை மல்லாகம் நீதிமன்றிற்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் வசித்து வந்த பிரஸ்தாப சிறுமி தனியார் கல்வி நிலையம் சென்று வீடுதிரும்பவில்லை. இந்நிலையில் சிறுமி வவுனியாவில் உறவினர் வீடொன்றில் தங்கி யிருந்ததாக நேற்றுக் காலை உறவினரால் பொலிஸ் நிலையத்திற்குதகவல்வழங்கப்பட்டுள்ளது.

இச்சிறுமி வவுனியா சென்றமைக்கு காரணம் ஆராய்ந்த போது வருகின்ற வாரம் அச்சிறுமிக்கு சத்திர சிகிச்சை நடைபெறவுள்ளதால் அதற்கு பயந்து அவர் வவுனியா சென்றுள்ளதாக உறவினர் கூறியுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமித் பிரியந்த தெரிவித்துள்ளார். (2-23)

## 10ஆவது நாளாகவும்

# சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்பு வவுனியாவில் நேற்றும் தொடர்ந்தது





வவுனியாவில் போராட்டத்தை மேற்கொண்டு வரும் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வெயில், மழை என்பவற்றைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் சுழற்சி முறையில் நேற்று 10ஆவது நாளாகவும் தமது உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தீர்க்கமான முடிவை தெரிவிக்க வேண்டும், அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடைபெற்று வருகின்றது.

கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் அவர்கள் மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரில் ஒருவர் நேரில் வந்து சாதகமான பதில் வழங்கும் பட்சத்தில் மட்டுமே தமது போராட்டத்தை நிறுத்துவதாகவும், அதுவரை தமது உறவுகளைத் தேடிய போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப் போராட்டத்திற்கு அரசியல் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களின் பிரதிகளின் ஆதரவுகள் கடந்த காலங்களில் இருந்ததாகவும் தற்போது குறைந்து வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான உறுதியான முடிவு கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அரச தலைவருக்கு கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கையை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250-15)

# வீதியால் நடந்து சென்ற குடும்பஸ்தர் திடீரென மயங்கி விழுந்து மரணம்

### பண்டாரிக்குளத்தில் சம்பவம்

வவுனியா பொலிஸ் நிலையத்தின் கீழ் உள்ள பண்டாரிக்குளம் பொலிஸ்சோதனைச் சாவடி பிரிவில் உள்ள பண்டாரிக்குளத்தில் வீதியால் நடந்து சென்ற நபர் திடீரென மயங்கி விழுந்து மரணம் அடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பண்டாரிக்குளம் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த நபர் அப்பகுதியிலிருந்த கடையொன்றினுள் நீர் குடித்துவிட்டு திரும்பிச் சென்ற நிலையில் திடீரென வீதியில் மயங்கி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் வவுனியா உக்குளாங்குளத்தைச் சேர்ந்த துரைராசா கணேசலிங்கம் (வயது -43) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மக்களினால் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர நோயாளர் காவு வண்டிச் சேவை எண்ணுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நோயாளர் காவு வண்டி வைத்திய உத்தியோகத்தர்கள் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு எடுத்துச் சென்று வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

தற்போது உயிரிழந்தவரின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில்மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் இராணுவத்தால் எமது மண் மீட்புப் போராட்டத்தை நிறுத்தமுடியாது



கேப்பாப்பிலவில் கொட்டும் மழைக்கும் மத்தியில் தமது பூர்வீக நிலம் கோரி நேற்று ஐந்தாவது நாளாகவும மக்கள் போராட்டத்திலீடுபட்டனர்

இந்நிலையில் போராட்டத்திலீடுபடும் மக்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினர் புகைப்படம் எடுத்து வருவதாக தெரிவிக்கும் மக்கள் எத்தகைய அச்சுறுத்தலை விடுத்தும் எமது போராட்டத்தை நிறுத்திவிட முடியாது சொந்த மண்ணில் கால் பாதிக்கும் வரை எமது மண்மீட்பு போர் தொடருமென உறுதியாகத் தெரிவித்தனர். (2-281)

# நல்லிணக்கப் பொறுப்புக் கூறலுக்கு கால அவகாசம் வழங்குவது நீதிக்காக ஏங்கும் மக்களுக்கு பாதகமானது

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

இலங்கைக்கு நல்லிணக்க பொறுப்புகூறலுக்கு கால அவகாசம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நீதிக்காக ஏங்கும் தேசிய இனத்திற்கு சாதகமாக அமையாது என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் .பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போது ஜெனிவாவில் இடம்பெற்று வரும் மனித உரிமை பேரவை அமர்வில் இலங்கை அரசாங்கத்திற்கு நல்லிணக்க செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக் கூறலுக்கு கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள விடயம் வருமாறு.

பல்வேறு வழிகளிலும் இலங்கை தேசத்தில் பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மையினருக்கு நீதி கிடைப்பதற்கான தருணங்கள் கடந்தே சென்றுள்ளது. இவற்றிலும் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட பல்வேறான கோரிக்கைகள் இலங்கை அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே சர்வதேசத்தை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறான நிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையினால் இலங்கை அரசுக்கு கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை யிட்டு நாம் மன ஆறுதல் அடைந்த வேளையில் அதனூடான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு தொடர்ந்தும் காலம் கடத்தி வருகின்றமை வேதனைக்குரியது.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கம் சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க முடியாது உள்ளக பொறிமுறையினூடான விசாரணை என்று தெரிவிப்பதான்து ஏற்றுக்கொள்ளமுடியாத விடயமாகவே உள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்கில் தீர்ப்பும், குமாரபுரம் கொலைவழக்கு தீர்ப்பும் தமிழர்களை ஏமாற்றியுள்ள நிலையில் உள்ளூர் பொறிமுறையினூடான தீர்வில் நீதி நிலைநாட்டப்படும் என்பது சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது.

இதற்குமப்பால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் அமைப்பதற்கு பாராளுமன்றம் அனுமதியளித்துள்ள நிலையிலும் கூட இதுவரை அலுவலகத்தினை திறப்பதற்கு காலம் கடத்துவதும் இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்டுள்ள தமிழர்களின் நிலங்கள் விடுவிக்கப்படாமலும் அந் நிலங்களை மீட்க மக்கள் இறங்கி போராட வேண்டிய நிலை தற்போது காணப்படுவதும் இலங்கை யில் தேசிய இனங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு சமானமாக பார்க்கப்படவில்லை என்பதனை பறைசாற்றி நிற்கின்றது.

எனவே மீண்டும் மீண்டும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புகூறலுக்கான கால அவகாசத்தினை வழங்க மனித உரிமை பேரவை எத்தனிக்கக்கூடாது என கேட்டுக்கொள்கின்றேன் என அவ் அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (2-250)




# பாதிக்கப்பட்ட தாய்மாருக்கு விடிவு கிடைக்க எல்லோரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

(குருமன்காடு)

காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை தனிப்பட்டதோ அல்லது கட்சியினதோ இல்லை. வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட 22 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களது பிரச்சினை யாழ்ப்பாணத்தில் வைத்து பிரதமர், காணாமல் ஆக்கப்பட்டோர் பெரும்பாலும் உயிரோடு இருப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்று கூறியுள்ளார்.


ஆதலால் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தேர்தல் காலத்தில் இந்தத் தாய்மாருடைய வாக்குகளைப் பெற்றவர்கள். இவ்வாறு முரண்பட்ட வகையில் பேசக்கூடாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறை உணவுத் தவிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் நேற்று முன்தினம் பேரணியொன்று நடத்தப்பட்டது. இதன்போதே ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எங்களுடைய தாய்மார் இன்று காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எங்களால் கொண்டு வரப்பட்ட இந்த நல்லாட்சி என்கின்ற இந்த அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் இந்த காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் முன்னுக்கு பின் முரண்பாடான பல கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் வைத்து பிரதமர், காணாமல் ஆக்கப்பட்டோர் பெரும்பாலும் உயிரோடு இருப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்று கூறியிருந்தார். பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர்கள் நாட்டை விட்டு தப்பியோடியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டம், காணி விடுவிப்பு போராட்டம், தமிழ் அரசியல் கைதிகளின்விடுதலைக்கான போராட்டம் என இத்தகைய ஜனநாயகப் போராட்டங்களை கொச்சைப்படுத்துகின்ற, அரசாங்கத்திற்கு முண்டு கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். கடந்த 8 வருடமாக எங்களது பாதிக்கப்பட்ட மக்களுக்காக நடத்திய போராட்டங்களை நாங்கள் ஒரு பொது பனருக்கு கீழ் தான் நடத்தியிருந்தோம். ஆனால் இன்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என எமது கட்சி பனருக்கு கீழ் நடத்த வேண்டியுள்ளது.



இன்றைக்கு காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சார்பாக போராட்டம் நடத்த சிலர் தயங்குகின்றார்கள். இந்தப் போராட்டம் அரசிற்கு எதிரானது. இராணுவத்திற்கு எதிரானது. ஆகவே இந்த அரசாங்கத்திற்கு வலிக்கக்கூடாது. இராணுவத்திற்கு வலிக்கக் கூடாது என்பதற்காக இந்தப் போராட்டத்தை கொச்சைப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால்நாங்கள்இன்றைக்கு பகிரங்கமாக அழைப்பை விடுகின்றோம். சகல அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள் இந்த பாதிக்கப்பட்ட தாய்மார்களுக்கு நல்லதொரு செய்தி கிடைப்பதற்காக எல்லோரும்அணிதிரண்டு ஆதரவு வழங்குங்கள்.

ஆகவே எங்களது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை விடுத்து இந்த மக்களுக்காக எல்லோரும் ஒருமித்து குரல் கொடுங்கள். அதன் மூலம் தான் இந்த நாட்டில் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (2-250)

# பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட சம்பவ விசாரணை தீவிரம்



கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் பெண்ணொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியதாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் பொலிஸாரால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு நேற்று முன்தினம் சென்ற அவர், அங்கு கூடியிருந்த மக்களுடனான சந்திப்பில் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் அடிக்கடி எம்முடன் தொடர்பு கொள்கின்றார். அவர் இப்பகுதியில் அதிக காலம் பணிபுரிந்தபர். அவர் இப்பிரச்சினை தொடர்பில் நடுநிலை விசாரணை மேற்கொள்ளுமாறு கூறியுள்ளார்.

எனவே பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணைக்கும் ஒத்துழைப்பு வழங்குங்கள். சட்டத்தினை கையில் எடுப்பதற்கு யாருக்கும் முடியாது. எனவே எமது விசாரணை நடு நிலையாக காணப்படும். யாரும் பயப்பட வேண்டியதில்லை. பாதிக்கப்பட்டவருக்கு நீதி பெற்றுக் கொடுப்போம்.

உண்மையான குற்றவாளி யார் என்பதை கண்டறிந்து நீதியின் முன் நிறுத் துவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் அதிகளவான பொலிஸார் நேற்று முன்தினமும் குவிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்ற வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-312-15)







யாழ்.இந்திய துணைத்தூதரகமும் கிளிநொச்சி கல்விப் பண்பாட்டு அபிவிருத்தி மன்றமும் இணைந்து நடத்திய கலை கதம்பம் 2017 நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி திருநகர் கல்விப் பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்கள்,கலாமன்ற கலைஞர்கள் உள்ளிட்ட பலரின் சிறந்த இசை நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. கல்வி, பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் ம. பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன்.முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, காவேரி கலாமன்ற அருட்தந்தை கலாநிதி யோசுவா, கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் தலைவர் இறைபிள்ளை, ஓய்வு பெற்ற மின் பொறியியலாளரும் தமிழ்ச் சங்கத் தலைவருமான குமரிவேந்தன் மற்றும் மூத்த கலைஞர்களான வல்லிபுரம், நடராஜா, பார்வதி சிவபாதம், வேலாயுதம் உள்ளிட்ட கலைஞர்கள், பெருமளவான பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- பரந்தன் செய்தியாளர் )

# இலங்கையில் சமஷ்டி ஆட்சி

# ஐ.நா. பிரதிநிதி பரிந்துரை

(கொழும்பு)

**இலங்கையில் சமஷ்டி முறைமையிலான ஆட்சி நிறுவப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுபான்மையின மக்கள் தொடர்பான பிரதிநிதி ரீட்டா ஐசாக் தெரிவித்துள்ளார்.**



இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமெனவும், சமஷ்டி முறையின் கீழ் இவ்வாறு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

இலங்கையை துண்டாடும் வகையில் தீர்வுத் திட்டமொன்றை ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதியொருவர் பரிந்துரை செய்த முதல் சந்தர்ப்பம் இதுவென கொழும்பு ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த 2015ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரீடா ஐசாக் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை விஜயம் குறித்த அறிக்கையை ஐசாக் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பித்துள்ளார்.


இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் 22ம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் செயிட் அல் ஹூசெய்ன் தனது நிலைப்பாட்டை வெளியிட உள்ளார்.

மேலும் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியவை என 24 விடயங்களை ஐசாக் பரிந்துரை செய்துள்ளார்.

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களுக்கு தலா ஏழு பேர்சஸ் காணி வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

வடக்கில் அமுல்படுத்தப்பட்டு வரும் தேசவளமை சட்டம் அதே விதமாக அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் ஐசாக் கோரியுள்ளார் என கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## ஜனாதிபதியும் பிரதமரும் புதிய பொருளாதார திட்டமொன்றை அமுல்படுத்தத் தீர்மானம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து புதிய பொருளாதார திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவ இணைக் கமிட்டியும் பிரதமர், ஜனாதிபதி ஆகியோருடன் இணைந்து அபிவிருத்தித் திட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டு கடன்கள் ஒரு புறத்தில் செலுத்தப்படும் அதேவேளை, மறுபுறத்தில் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்த திட்டத்திற்கு யோசனைகளை முன் வைத்துள்ளார்.

இதன்படி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அடுத்த வாரம் கூடி புதிய பொருளாதாரத் திட்டம் குறித்து ஆராய்ந்து, புதிய அபிவிருத்தித் திட்டம் பற்றி அறிவிக்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## இலங்.பிரஜைக்கு கட்டாரில் சிறை!

(கொழும்பு)

கட்டாரில் உள்ள இலங்கை பிரஜை ஒருவருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதித்து டோஹா குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சட்டவிரோதமாக போதைப் பொருள் விநியோகித்தல் மற்றும் பாவனை என்ற குற்றச்சாட்டுக்கள் அடிப்படையிலேயே இலங்கை பிரஜைக்கு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டு காரணமாக அபராதப் பணமாக 200,000 ரியால் செலுத்துமாறும் குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் கஞ்சா மற்றும் போதைப்பொருட்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வதாக போதைப்பொருள் தடுப்பு பிரிவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபரின் குருதிப் பரிசோதனை மேற்கொண்ட போதும் அவர் போதைப் பொருள் உட்கொண்டுள்ளார் என தெரியவந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## நீர்மின் உற்பத்திக்கு பாதிப்பு வருமா?

மின்சார உற்பத்தி செய்வதற்கு போதுமான அளவு நீர் கிடைக்கவில்லை என மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வள அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மின்னுற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளின் ஓரளவு கடும் மழை வீழ்ச்சி கிடைத்துள்ள போதிலும் மின் உற்பத்தி செய்வதற்கு தேவையாள அளவு நீர் கிடைக்கப்பெறவில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த தினங்களில் பெய்த கடும் மழையினால் நீர் நிலைகளில் 0.3 வீத நீரே அதிகரித்துள்ளதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் மின்சாரத் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக மின் பாவனையாளர்கள், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு அமைச்சு தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விபத்தில் மூவர் பலி!

ருவன்வெல்ல - அமித்திரிகல பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் பலியாகியுள்ளதோடு 6 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவனொளி பாதயாத்திரைக்கு சென்று திரும்பிய வான் ஒன்று பேருந்து ஒன்றுடன் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தின் போது வான் சாரதி மற்றும் அதில் பயணித்த இருவர் விபத்தில் பலியாகியுள்ளதாகவும் சம்பவத்தில் காயமடைந்த 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## பிறவிக்குறைபாட்டால் வருடாந்தம் மூவாயிரம் குழந்தைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

குழந்தைப் பருவத்தில் மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

உலகில் மனிதப்பிறவியே சிறந்த படைப்பு. ஆனால் அங்கவீனம் ஒருவனுக்கு பிறக்கும் போதே தோன்றுமாயின் அது அவனது பெற்றோர் இழைக்கும் தவறாகும்.

இவர்கள் உண்ணும் முறையற்ற உணவும், குடிபானங்களும், பாவிக்கும் அழகுசாதனப் பொருட்களும் இப்படியான மறைமுக தாக்கங்களை கர்ப்பத்திலே ஏற்படுத்துகின்றன.

மேலும் வளர்முக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் சுகாதாரம் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சுகாதார தன்மைக்கு ஒத்ததாகவுள்ளது.

அதிகமான குழந்தைகள் வைத்தியசாலைகளிலேயே பிறக்கின்றன. இருந்தும் இதில் ஒரு வயதுக்கும் குறைந்த குழந்தைகள் 2500, 3000 வரை வருடாந்தம் மரணத்தை தழுவுகின்றன.

20 வயதுக்குள் 3600 மரணங்கள் ஏற்படுகின்றன. எனவே நாம் இன்று பொது மக்களிடம் பாடசாலை ரீதியாகவும் சமூக அமைப்புகள் மூலமாகவும் தெளிவுபடுத்தல் நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எதிர்காலத்தில் பிறவிக் குறைபாட்டுடன் குழந்தைகள் பிறக்கும் சதவீதத்தை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் தற்போது எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சர்வதேச நாணய நிதியத் தலைவர் இலங்கைக்கு இம்மாதம் வரமாட்டார்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்ரின் லெகாட்டின் இலங்கைக்கான விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

கிறிஸ்ரின் லெகாட் இம்மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த நிலையில், சர்வதேச நாணய நிதியம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது. கிறிஸ்ரின் லெகாட்டின் கால அட்டவணையில் மேற்கொள்ளப்பட்ட எதிர்பாராத மாற்றம் காரணமாக அவரின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக நாணய நிதியம் கூறியுள்ளது.

எதிர்காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு கிறிஸ்ரின் லெகாட் எதிர்பார்த்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஹரி ரைய்ஸ் தெரிவித்தார்.

ஆசியாவிலுள்ள மற்றுமொரு நாட்டிற்கான விஜயத்தின் போது மரியாதை நிமிர்த்தம் இலங்கைக்கு வருகை தருவதற்கு கிறிஸ்ரின் லெகாட் திட்டமிட்டிருந்ததாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.



கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கைக்கு வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்ட 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் குறித்த மீளாய்வு செயற்பாடுகளை கொழும்பிற்கு விஜயம் செய்துள்ள சர்வதேச நாணய நிதியக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஈ தேசிய அடையாள அட்டை அச்சிடுவதில் மோசடிகள்

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விவகாரத்தில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை அச்சிடும் பொறுப்பு உரிய விலை மனுக்கோரல் அடிப்படையில் வழங்கப்படவில்லை என குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

விலை மனுக்கோரல் குழுவின் பலரும் அதற்கு எதிர்ப்பு வெளியிட்ட போதிலும், அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து கோப் குழுவும், கணக்காய்வாளர் நாயகம் திணைக் களமும் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு விசாரணை நடத்தி வரும் நிலையில் அவசரமாக நிறுவனமொன்றுக்கு அச்சிடும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை அச்சிடுவதற்கு 42 ரூபா அறவீடு செய்யப்படும் என விலை மனுக்கோரிய நிறுவனத்திற்கு வழங்காது, 72 ரூபா அறவீடு செய்யும் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.


சர்வதேச தர நிர்ணயங்களை நிறுவனம் பூர்த்தி செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்ட போதிலும், ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனம் சர்வதேச தர நிர்ணய சான்றிதழை சமர்ப்பிக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-7)

# பாதாள உலகக் குழுக்களை கோத்தா என்ன செய்தார்

## கே.டி.லால்காந்த விளக்கம்

கோத்தபாய தனக்கு எதிராகவுள்ள பாதாள உலகக் குழுக்களையே இல்லாதொழித்தார் என மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கத் தலைவர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுக்களுக்குப் பதிலாக அவர்களது ஆட்களையே போட்டு பாதாள உலகக் குழுக்களின் வேலையை செய்தார்கள். கடந்த காலங்களில்தங்களுக்கு வேண்டப்படாத சிறைக் கைதிகளை சிறைக்குள் வைத்து கொலை செய்தனர் எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடந்த பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அவர்



இதனைத் தெரிவித்தார். (இ-7)

# குமார வெல்கமவுக்கு நாமல் வாழ்த்து

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் அரசியல் பயணத்திற்கு நாமல் ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குமார வெல்கம அரசியலுக்கு வந்து நேற்றுடன் 35 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மேலும், அதிகமான வருடங்கள் இலங்கை அரசியலில் இணைந்து செயற்பட வேண்டும் என நாமல் ராஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ தன் வாழ்த்துச் செய்தியை பதிவிட்டுள்ளார். (இ-7)

# தமிழக மீனவர்களின் 42 படகுகளை விடுவிக்க அரசாங்கம் தீர்மானம்

இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளில் 42 படகுகளை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட படகுகளே விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதாக 2015ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இலங்கை அரசாங்கத்தால் 130 தமிழக மீனவர்களின் படகு கைப்பற்றப்பட்டு, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதுடன், அவர்களின் படகுகளும் கைப்பற்றப்படுகின்றன.

கைது செய்யப்படுகின்ற தமிழக மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றபோதும், அவர்களது மீன்பிடிப் படகுகளை இலங்கை அரசாங்கம் விடுவிக்கவில்லை.

2015 ஆம் ஆண்டு முதல் இந்த நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. கைப்பற்றப்படும் படகுகள் மீண்டும் வழங்கப்பட மாட்டாது என்று மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தொடர்ச்சியாக குறிப்பிட்டு வந்தார்.

இந்த நிலையில், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 42 தமிழக மீனவ படகுகளை விடுவிக்கவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், வட மாகாண மீனவர்களின் இணக்கத்துடன் மட்டுமே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இது குறித்து கடந்த மாதம் வட மாகாண மீனவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில், அவர்களின் இணக்கம் இல்லாமல் படகுகள் விடுவிக்கப்பட மாட்டாது என்று தாம் கூறியதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்திய தூதுக் குழுவினருடனான சந்திப்பின் போது படகுகளை விடுவிப்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# கிழக்கு மாகாண சபையின் அடுத்த ஆட்சியும் தமிழர் முஸ்லிம்கள் இணைந்த நல்லாட்சிதான்

## நான் சவால் விடுகின்றேன்- முதல்வர் நஷீர்

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண சபையின் அடுத்த ஆட்சியும் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து கோலோச்சும் நல்லாட்சியாகத்தான் இருக்கும் என்று தான் சவால் விடுப்பதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஷீர் அஹமட் தெரிவித்தார்.





மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு, மற்றும் மகப்பேற்றுப் பிரிவு கட்டடத் தொகுதி என்பன திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றபோது அவர் இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர், கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் ஸ்ரீலமுகா தலைவரும் அமைச்சருமான றவூப் ஹக்கீம் தலைமையில் நாம் புரிந்துணர்வுக் கலந்துரையாடல்ஒன்றை நடத்தினோம்.

வழமையாக முறுகல்களாகப் பார்க்கின்ற சூழ்நிலைகளைத் தவிர்த்து பரஸ்பர நட்புறவுடன் ஆக்கபூர்வமானதாக இக்கலந்துரையாடல் அமைந்திருந்தது.

கல்முனை நகரத்தை அங்கு வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் சேர்ந்து எவ்வாறு ஒற்றுமையாக அபிவிருத்தி செய்யலாம் என்பதைப் பற்றியதாகவே இக் கலந்துரையாடல் அமைந்திருந்தது. இது ஒரு சாதகமான மாற்றம்.

தமது பிரதேசங்களுக்குள் பல்வேறு வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அத்துடன் இன ஐக்கியத்திற்கும் பரஸ்பர ஒத்துழைப்பிற்கும் விட்டுக் கொடுப்புடன் மனம் விட்டுத் தங்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் கண்டறிந்து கொள்வதற்கு முன்வந்ததையிட்டு இரு சாராரும் திருப்திப் பட்டுக்கொள்ளும் அளவிற்கு நகர்வுகள் இடம்பெற்றன.

கடந்த 30 வருடகால யுத்தத்தில் பிளவுபட்டுப் போயிருந்த சிறுபான்மை மக்கள் மத்தியில் இதுவொரு ஒன்றுபட்ட மகத்தான வெற்றி என்றே கொள்ள வேண்டும். மாகாண சபையிலே நாங்கள் ஏற்படுத்திய இனங்கள் இணைந்து கொண்ட நல்லாட்சியின் பயனாக அடையப்பெற்ற இந்த வெற்றியை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

இனங்களுக்கிடையில் எந்தப் பிரச்சினை இருந்தாலும் அதை மனிதாபிமானத்துடனும் சகோதர வாஞ்சையுடனும் விட்டுக் கொடுப்புடனும் தியாகத்துடனும் அணுக வேண்டும் என்பதை தற்போதைய சூழல் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது.


தெளிந்த மனதுடன் வெளிப்படைத் தன்மையுடன் நாங்கள் மாகாண சபை ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

கடந்த வருடம் மார்ச் மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாங்கள் சேர்ந்து ஆட்சியமைத்தபோது அடுத்த மாத மாகாண சபைக் கூட்டத்தை நடத்த இந்த ஆட்சி நிலைக்காது என்று எங்களுக்குச் சவால் விடுத்தார்கள்.

அவர்கள் ஆரூடம் கூறி இப்பொழுது ஒரு வருடம் கழிந்து விட்டது. நாங்கள் இப்பொழுது அவர்களுக்குச் சவால் விடுக்கின்றோம் அடுத்த மாகாண சபை நிர்வாகமும் தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்த நல்லாட்சியாகத்தான் கோலோச்சும் அதனை நாங்கள் சாதித்துக் காட்டுவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# எரிவாயு திட்டத்தை எதிர்த்து

# 18 ஆவது நாளாகத் தொடர்ந்த நெடுவாசல் மக்களின் போராட்டம்



(புதுக்கோட்டை)


எரிவாயு திட்டத்திற்கு (ஐதரோ காபன்) எதிராக நெடுவாசலில் 18-வது நாளாக நேற்றும் போராட்டம் தொடர்ந்தது. இதேவேளை கோரிக்கைகள் நிறைவேறும் வரை தங்கள் அறவழிப் போராட்டம் தொடரும் என போராட்டக்குழு தெரிவித்துள்ளது. மேலும் ஓ.என்.ஜி.சி. அளித்த விளக்கங்களை ஏற்க முடியாது எனவும் திட்டவட்டமாக கூறியுள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் பகுதியில் ஐதரோ காபன் எனும் இயற்கை எரிவாயு எடுக்க மத்திய அரசு அனுமதி வழங்கியதை கண்டித்து நெடுவாசலில் நாடியம்மன் கோவில் முன்பு போராட்டம் நடந்து வருகிறது.

இதேபோல நல்லாண்டார் கொல்லையிலும் வயல் வெளியில் தகரக்கொட்டகை அமைத்து பொதுமக்கள் தர்ணா போராட்டம் நடத்தி வருகின்றனர். இதில் இளைஞர்கள், தன்னார்வ அமைப்பினர், கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்று வருகின்றனர்.

இதனிடையே நெடுவாசல், நல்லாண்டார் கொல்லை, கோட்டைக்காடு பகுதியில் ஐதரோ காபன் திட்டத்திற்கு தோண்டப்பட்ட ஆழ்துளை கிணறுகள் மூடப்படும் என மாவட்ட ஆட்சியர் கணேஷ் உறுதியளித்தும், அதனை பொதுமக்கள் ஏற்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-12)

## கடலோர காவற்படையால் 115 குடியேற்றவாசிகள் மீட்பு




லிபிய கடலோர காவற்படையால் சுமார் 115 சட்டவிரோத குடியேற்றவாசி கள் திரிபோலி (Tripoli) எனும் நகருக்கு அருகே பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீட்பு நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிய படகு ஒன்றில் பல குடியேற்றவாசிகள் வந்ததாகவும் பாரம் தாங்க முடியாமல் குறித்த படகு தஜோரா பகுதிக்கு அருகில் கடலில் மூழ்க ஆரம்பித்ததாகவும் லிபிய கடலோர காவற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த லிபிய கடற்படை வீரர் ஒருவர், "கடலில் குடியேற்றவாசிகள் சிலர் தத்தளித்து வருவதாக எமக்கு தகவல் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து சில மீட்புப் படையினரை நாம் அனுப்பி வைத்தோம்.

இதுவரை 115 குடியேற்றவாசிகள் மீட்கப்பட்டுள்ளனர். 25 பேர் காணாமல் போயுள்ளனர். காப்பாற்றப்பட்ட குடியேற்றவாசிகளில் ஆறு பேர் பெண்கள்" என தெரிவித்துள்ளார்.

காணாமற்போன குடியேற்றவாசிகளை தேடும் பணியில் கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்ட போதும் இதுவரை பலன் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவுக்கு செல்ல முனையும் பல குடியேற்றவாசிகள் லிபியா ஊடாகவே செல்வதாகவும் ஐரோப்பாவை சென்றடைந்துள்ள குடியேற்றவாசிகளில் 60 தொடக்கம் 70 சதவீதமான குடியேற்றவாசிகள் லிபியா ஊடாகவே சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சர்ச்சையில் சிக்கிய சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆதரவு



(வோஷிங்டன்)

அமெரிக்க சட்டமா அதிபர் ஜெப் செசன்ஸ் பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சியான ஜனநாயகக்கட்சி போர்க்கொடி உயர்த்தி உள்ள நிலையில், அவருக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின்போது ரஷ்ய தூதர் செர்கெய் கிஸ்ல்யாக்கை இரு முறை சந்தித்து பேசியுள்ளதாக வெளியான தகவலையடுத்து சர்ச்சையில் சிக்கிய ஜெப் செசன்ஸ் தற்போது விசாரணைகளை எதிர்கொண்டுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க சட்டமா அதிபர் ஜெப் செசன்ஸ்க்கு ஆதரவாக ட்ரம்ப் கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

"ஜெப் செசன்ஸ் மீது எனக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது.

செசன்சுக்கும், ரஷ்ய தூதர் செர்கெய் கிஸ்ல்யாக்குக்கும் இருந்ததாக கூறப்படுகிற தொடர்பு பற்றி எனக்கு ஏதும் தெரியாது.

ஆனால் செசன்ஸ் நேர்மையான மனிதர். அவருக்கு எதிராக ஜனநாயக கட்சியினர் சூனிய வேட்டையில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவித்தார்.

உள்நாட்டு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்திய அமெரிக்க சட்டமா அதிபர் ஜெப் செசன்ஸின் குற்றச்சாட்டை அடுத்து, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு குறித்து நடைபெறுகிற விசாரணையில் இருந்து ஜெப் செசன்ஸ் தாமாக முன் வந்து விலகியுள் ளார்.

அதே நேரத்தில் தனது நியமனம் தொடர்பான செனட் சபை விசாரணையின் போது, ரஷ்ய தூதருடனான தனது சந்திப்பு குறித்து கூறாதது, தவறு அல்ல என்று அவர் வோஷிங்டனில் நிருபர்களிடம் தெரிவித்தார். (இ-12)

# பல்மைரா நகர் மீளக் கிடைத்தது ரஷ்ய படைகளின் உதவியால்தான் உரிமை கோருகிறது அந்நாடு



சிரியாவின் பல்மைரா நகர் மீளக் கைப்பற்றப்பட்டமைக்கு ரஷ்ய படைவீரர்களின் அர்ப்பணிப்பு இன்றியமையாததாக அமைந்தது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்குறித்த கருத்தை கடந்த வெள்ளிக்கிழமை மொஸ்கோவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ரஷ்ய லெப்டினன்ட் ஜெனரல் செர்கெய் ருட்ஸ்கொய் (Sergei Rudskoi) தெரிவித்துள்ளார்.

பல்மைரா நகரை மீளக் கைப்பற்றும் நடவடிக்கைக்கு ரஷ்ய ராணுவ ஆலோசகர்கள் சிறந்த முறையில் திட்டமிட்டார்கள் எனவும் குறித்த தாக்குதல் நடவடிக்கைக்கு ரஷ்ய போர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன எனவும் சிறப்பு படையினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர் எனவும் அவர் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி, குறித்த நடவடிக்கையின் போது பல ஆயிரக்கணக்கான ஐ.எஸ் தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.எஸ் தீவிரவாதிகள் விரட்டியடிக்கப்பட்டு பல்மைரா நகர் முதல் தடவையாக அரச படைகளால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மீண்டும் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பல்மைரா நகர் ஐ.எஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளானது.

சிரியாவின் மிகத் தொன்மையான நகர் என அழைக்கப்படும் குறித்த நகரை கைப்பற்றும் முயற்சியில் சிரிய அரச தரப்பு படையினர் குறித்த பகுதியில் தமது தாக்குதல்களை தீவிரப்படுத்தினர்.

இதன்விளைவாக கடந்த வியாழக்கிழமை பல்மைரா நகர் முற்றிலுமாக சிரிய அரச படையினரால் கைப்பற்றப்பட்டது. (இ-12)

# 2017 ராணுவ பட்ஜெட் 7 சதவீதம் அதிகரிப்பு

## சீனா அதிரடி முடிவு



சீனாவின் இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இராணுவ பட்ஜெட்டுக்கென கடந்த நிதியாண்டை விட கூடுதலாக 7 சதவீதம் தொகையை ஒதுக்க அந்நாட்டின் கம்யூனிஸ்ட் அரசு தீர்மானித்துள்ளது.

உலகில் அதிக அளவிலான மக்கள்தொகையை கொண்டுள்ள சீனா, அயல் நாடுகளை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

தற்போது 23 இலட்சம் படைவீரர்களை வைத்திருக்கும் சீனா, ஒவ்வொரு ஆண்டும் இராணுவத்திற்கென பட்ஜெட்டில் அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

அப்படி ராணுவ பலத்தை அதிகரித்துக் கொண்டிருக்கும் சீனாவில் 3 இலட்சம் இராணுவ வீரர்களை ஆட்குறைப்பு செய்யப்போவதாக ஜனாதிபதி க்சி ஜின்பிங் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் தெரிவித்திருந்தார்.

சீர்குலைந்த பொருளாதார மந்தநிலையை புனரமைக்கவும், வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க இருப்பதாலும், தரமான வீரர்களை கொண்டு வலிமையான இராணுவத்தை உருவாக்கவும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பின் விளைவாக லெப்டினன்ட் ஜெனரல், கேணல் என இராணுவத்தில் உயர்பதவி வகிக்கும் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

இந்த ஆட்குறைப்பு நடவடிக்கை இந்த ஆண்டுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்நாட்டின் இராணுவ அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்டாய முறையில் இராணுவத்தை விட்டு வெளியேற்றப்படும் அனைவருக்கும் நியாயமான ஓய்வுக்கால இழப்பீடு வழங்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

சீன இராணுவத்தில் இப்படி ஆட்குறைப்பு செய்வது இது நான்காவது முறையாகும். இதற்குமுன், கடந்த 1987 ஆம் ஆண்டு 4.238 மில்லியனில் இருந்து 3.235 மில்லியனாக குறைக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு 5 இலட்சம், 2003 முதல் 2005 வரை 2 இலட்சம் வீரர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட்டனர்.

இந்நிலையில், மேலும் 3 இலட்சம் பேரை இராணுவ வேலையில் இருந்து வெளியேற்றுவதாக சீனா அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சீனாவின் இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை அந்நாட்டு பாராளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதில் இராணுவ பட்ஜெட்டுக்கென கடந்த நிதியாண்டைவிட கூடுதலாக 7 சதவீதம் தொகையை ஒதுக்க அந்நாட்டின் கம்யூனிஸ்ட் அரசு தீர்மானித்துள்ளது. (இ-12)




# அமெரிக்க ஜனாதிபதியின் அடுத்த அதிரடி உத்தரவு

ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி முதல் 6 மாதத்துக்கு தற்காலிகமாக 'எச்.1 பி' விசா வழங்கப்பட மாட்டாது என்று அமெரிக்கா அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்ற டொனால்ட் ட்ரம்ப் அங்கு தங்கி பணிபுரியும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான நிலையை கடைப்பிடித்து வருகிறார்.

பதவியில் அமர்ந்ததும் 7 இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் குடியேறவும், அமெரிக்கா வந்து செல்வதற்கும் 6 மாதத்துக்கு தற்காலிக தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில் தற்போது அமெரிக்காவில் பணிபுரியும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஐ.டி. நிறுவன ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கியுள்ளார். அமெரிக்காவின் ஐ.டி. துறையில் 85 சதவீதத்துக்கும் அதிகமாக இந்தியர்களே பணிபுரிந்து வருகிறார்கள்.

அவர்களால் அமெரிக்கர்களுக்கு வேலை வாய்ப்பு பறிபோகிறதே என்ற எண்ணத்தில் ஐ.டி. துறைகளுக்கு நெருக்கடி கொடுத்தார்.

ஐ.டி. நிறுவனங்கள் நட்டப்படும் அளவுக்கு கடுமையான முறையில் இரு மடங்கு சம்பள உயர்வு அறிவித்தார்.

அடுத்த கட்டமாக வெளிநாட்டவர்கள் அமெரிக்காவில் பணிபுரிய செல்வதற்கான 'எச்.1பி' விசா வழங்கும் நடைமுறைகளில் மாற்றம் செய்தார். பல்வேறு கெடுபிடிகளையும் நிபந்தனைகளையும் விதித்தார்.

இந்த நிலையில் தற்போது மேலும் ஒரு இடி தாக்குவது போல் எச்.1பி விசா வழங்குவதையே நிறுத்தி உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி முதல் 6 மாதத்துக்கு தற்காலிகமாக 'எச்.1பி' விசா வழங்கப்பட மாட்டாது என்று அமெரிக்கா நேற்று முன்தினம் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

'எச்.1பி' விசா வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதால் இந்திய ஐ.டி. ஊழியர்கள் கடுமையான பாதிப்பு அடைவார்கள்.

ஏற்கனவே பணிபுரியும் ஊழியர்கள் தவிர புதிதாக ஊழியர்கள் இந்தியாவில் இருந்து அமெரிக்கா செல்ல முடியாது.

இது தற்காலிகம் என்று அறிவித்தாலும் தடையை மேலும் மேலும் நீடித்துக் கொண்டே செல்லவும் ஜனாதிபதி ட்ரம்ப் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்பு எச்.1 பி விசா பெற்றவர்கள், தங்கள் மனைவி அல்லது கணவருக்கு மிக எளிதாக பணி விசா பெறும் நிலை இருந்தது. அந்த சிறப்பு சலுகை ஏற்கனவே இரத்து செய்யப்பட்டது.

இதனால் எச்.1பி விசா பெறுபவர்கள் மனைவி அல்லது கணவனுக்கு என்று விசா பெற இயலாத நிலை ஏற்பட்டது.

தற்போது விசா வழங்குவதையே நிறுத்தி விட்டது இது எதிர்காலத்தில் அமெரிக்கா செல்லும் ஐ.டி. நிறுவன ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்கும்நிலையை ஏற்படுத்தி உள்ளது. இந்தியாவில் இருந்து ஐ.டி. வேலைக்கு செல்பவர்கள் எண்ணிக்கை குறையும் பட்சத்தில் அந்த ஐ.டி. வேலைகள் அனைத்தும் அமெரிக்கர்களுக்கே கிடைக்கும் என்று ட்ரம்ப் எதிர்பார்க்கிறார். (இ-12)

# ட்ரம்ப் குற்றச்சாட்டு; ஒபாமா மறுப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்த காலத்தின்போது, அப்போதைய ஒபாமா அரசு தனது தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக் கேட்டதாக, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறிய குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

"ஜனாதிபதி தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த காலப் பகுதியில் எனது தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்கப்பட்டதுடன் முறைகேடாகப் பதிவும் செய்யப்பட்டது.

இதற்கு அப்போதைய ஜனாதிபதி ஒபாமாவே காரணம்" என ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

மேலும், தொலைபேசியில் பேசிய விடயங்களை பதிவு செய்திருப்பதை கொடிய செயல் என்றும் விபரித்திருந்த ட்ரம்ப், இந்த செயற்பாட்டை 1970ஆம் ஆண்டு ஜனாதிபதி நிக்ஸன் ஈடுபட்ட வோட்டர்கேட் மோசடியோடு ஒப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இதற்கு பதிலளித்துள்ள ஒபாமாவின் செய்தித் தொடர்பாளர், "ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் சாதாரண அமெரிக்க குடிமகன் உட்பட யாருடைய தொலைபேசியும் ஒட்டுக்கேட்கப்படவில்லை. இது தொடர்பாக ஒபாமா எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை" எனக் கூறியுள்ளார். (இ-12)

# இரு எண்ணெய் முனையங்களை கைப்பற்ற தீவிரமடையும் போர்

லிபியாவின் இரண்டு முக்கிய எண்ணெய் முனையங்களை கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான போர் தீவிரமடைந்து வருகிறது.

ராஸ் லனுஃப், எஸ் சிடர் ஆகியவற்றை முற்றுகையிடுவதற்கு பென்காசி பாதுகாப்புப் படையினர் என்று அறியப்படும் ஆயுதக்குழு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் ஒன்றை தொடங்கியுள்ளது.

அவர்கள் இந்த எண்ணெய் முனையங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், இவற்றிற்கு அருகிலுள்ள குடியிருப்பு வளாகங்களை மட்டுமே இந்த ஆயுதப்படை கட்டுப்பாட்டில் கொண்டிருப்பதாக எண்ணெய் வளத்துறையோடு தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன.

லிபியாவின் கிழக்கில் பெரும் பகுதியை தன்னுடைய அதிகாரத்தின் பிடியில் வைத்திருக்கும், இராணுவத்தை விட்டு வந்துவிட்ட தளபதி கலிஃபா ஹாஃப்தாரின் கட்டுப்பாட்டில் இந்த இரு எண்ணெய் முனையங்களும் இருந்து வந்துள்ளன.

லிபிய தேசிய படை என்று அறியப்படும் அவருடைய படைப்பிரிவுகள் வான்வழித் தாக்குதல்கள் மூலம் பதில் தாக்குதலை அதிகரித்து வருகின்றன. (இ-12)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாண மக்களுக்கு 1785 சிறிய தொழில் முயற்சிகள் ஜனாதிபதியால் முன்னெடுப்பு

## நல்லிணக்க அமைச்சின் செயலாளர் தகவல்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன' தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சர் என்ற அடிப்படையில் கடந்த 28 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைவாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாணங்களில் 1785 சிறிய தொழில் முயற்சிகளை, கிராமங்களை மையமாகக் கொண்ட தொழில்முயற்சிகளை முன்னெடுக்கும் திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

சிறிய தொழில் முயற்சிகள் கருத்திட்டத்தின் நோக்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களினது சமூக, பொருளாதார மட்டத்தினை உயர்த்தி வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பிரதேச ரீதியாக பின் தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் பிரதேச வேறுபாடுகளைக் குறைப்பதாகும்.

இத்திட்டத்தின் கீழ் சிறுதொழில் முயற்சிகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள 113 கிராமங்களில் முன்னெடுக்கப்படுவதுடன் இதற்கான நிதியின் ஒருபகுதி சலுகை அடிப்படையிலான கடனாக பிராந்திய வங்கி மற்றும் சனச வங்கியினூடாக வழங்கப்படும்.

இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 446 மில்லியன்களாக காணப்படுவதுடன் ஒவ்வொரு தொழில் முயற்சியும் ரூபா 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்படாத நிதியினைப் பெறுவதற்கு வசதி செய்து கொடுக்கப்படும்.


ஒவ்வொரு சிறுதொழில் முயற்சியினதும் மதிப்பிடப்பட்ட உதவு தொகையில் 25% நன்கொடையாக வழங்கப்படுவதுடன் எஞ்சிய 75% சலுகைக் கடனாக வழங்கப்படும்.

கடனுக்கான வட்டித் தொகை அரசினால் பொறுப்பேற்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தலைமை வகிக்கப்படும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

இக்கருத்திட்டம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை வலுப்படுத்துவதற்காக நல்லிணக்கப் பொறிமுறையின் ஆற்றுப்படுத்துகை மற்றும் இழப்பீடு வழங்கல் திட்டத்தின் ஒருபகுதியாகவும் நிலைமாற்று நீதியின் ஒருபகுதியாகவும் வறுமையைக் குறைப்பதற்கு முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டமாகவும் நோக்கப்படுகின்றது என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி மேலும் தெரிவித்தார். (இ-12)

# பொருத்தமற்ற பண்புகளுடன் அரச தலைவர் மகிந்த விமர்சனம்



(கொழும்பு) நாட்டுக்குள் நடைபெறும் சகல விடயங்கள் தொடர்பிலும் நாட்டை நிர்வகிப்போர் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எந்தவொரு நிகழ்வும் நடைபெற்றதன் பின்னர், அடுத்த நாள் பத்திரிகையைப் பார்த்துத் தான் அறிந்துகொள்வது என்ற நிலைமை, நாட்டின் நிர்வாகிகளுக்குப் பொருத்தமற்ற ஒரு பண்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதாள உலக தலைவர்களுக்கும் அரசாங்கத்தை அமைக்கும் செல்வாக்கு உள்ளது. கொலை செய்யப்பட்ட பாதாள உலக குழுத் தலைவர் சமயங் என்பவரும், தற்பொழுதுள்ள நிலைமையின் படி, அரசாங்கத்தை அமைக்கும் அதிகாரத்துடன் காணப்பட்டார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொரலஸ்கமுவயில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# ஆபத்தான தொழில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஆயுள் காப்புறுதி திட்டம்



(கொழும்பு) ஆபத்தான தொழில்களில் பணியாற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு ஆயுள் காப்புறுதி கட்டாயமாக்கப்படுவதற்கான சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஊழியர் இறக்கும் போது செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகையை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கும் தொழிற்சாலை தொடர்பான சட்டத்தில் திருத்தங்கள் பல கொண்டு வரப்படவுள்ளன என்று தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களில் கைத் தொழிற்சாலைகளிலும் வேலைத் தளங்களிலும் ஊழியர்கள் சிலர் உயிரிழந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய துரிதமான நடவடிக்கைகளை கண்டறிவதற்காக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இது குறித்து ஆராயப்பட்டுள்ளது. (இ-7)

# நேபாளத்தில் இலங்கை முதலீடு

நேபாளத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை, இந்தியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் முன் வந்துள்ளன.

அந் நாட்டில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற முதலீடு தொடர்பான மாநாட்டில் இது தொடர்பான உறுதிமொழி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆலோசனைத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளதாக நேபாள நாட்டைச் சேர்ந்த கைத் தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சைற்றம் குறித்து 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதம்

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியான சைற்றம் நிறுவனம் தொடர்பிலான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி இந்த விவாதம் தொடர்பிலான பிரேரணையை முன்வைத்துள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி முற்பகல் 11.30 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரையில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதமாக இது இடம்பெறவுள்ளது. (இ-7)

# உக்ரைன் பிரஜை உயிரிழப்பு

(கொழும்பு) தங்காலையிலுள்ள கடற்கரையில் நீராடிய வெளிநாட்டு பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உக்ரைன் நாட்டைச் சேர்ந்த 68 வயதுடைய நபரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த வெளிநாட்டவரை ரன்னா ஆதார வைத்தியசாலையில் அனுமதித்ததை அடுத்து அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இன்று இந்தோனேஷியா பயணமாகிறார் ஜனாதிபதி

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவினர், இந்தோனேஷியா நோக்கி இன்று புறப்படவுள்ளனர். ஜகார்த்தா நகரில் ஆரம்பமாகவுள்ள, இந்திய கடற்பிராந்திய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் அங்கு செல்கிறார். இம்மாநாடு நாளை ஆரம்பமாகவுள்ளது. (இ-7)

# காலம் கேட்பது தீர்வல்ல; மாற்று யோசனை தேவை

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படும் அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க இலங்கை மாற்று யோசனையொன்றை நோக்கி தயாராக வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.

இலங்கை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மந்தகதியில் உள்ளதாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து அவரிடம் வினவிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை மீது ஏற்கனவே விதித்திருந்த நிபந்தனைகளை ஒழுங்கான முறையில் நிறைவேற்றப்படாமை குறித்து ஐ.நா. இம்முறை அழுத்தங்களை பிரயோகித்துள்ளது.

ஐ.நா.வின் இந்த யோசனைகளை மீண்டும் நிறைவேற்ற காலம் கேட்டிருப்பது பொருத்தமான தீர்வு அல்லவெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# இம்சைக்குள்ளாக்கப்படுதலை இல்லாதொழிக்க அரசு முயற்சி

## ரவிநாத் ஆரியசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**நபர்கள் இம்சைக்குள்ளாக்கப்படுதலை முற்றாக இல்லாதொழிப்பதற்கான கொள்கையொன்றின் அடிப்படையில் சமகால தேசிய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.**

இம்சைகள் குறித்த முறைப்பாடுகளுக்கு எதிரான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்த நடைபவனியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டமை, அரசாங்கம் கடைப்பிடித்துள்ள கொள்கைக்கு ஊக்கமளிக்கும் செயற்பாடேயாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவில் இடம்பெற்ற உரையாடலில் இலங்கையின் பிரதிநிதியான ஆரியசிங்க இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார். இம்மைக்கு உள்ளாக்கப்படும் குற்றச்சாட்டு மற்றும் ஏனைய வகையிலான கொடூர இம்சை அல்லது தரம் குறைந்த வகையில் நபர்களை நடத்துதல் அல்லது தண்டனை விதிப்பது தொடர்பான (Special Rapporteur on Torture and other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment) ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான அறிக்கையில் இந்த விடயங்களுக்குப் பொறுப்பான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி கடந்த வருடத்தில் இலங்கை அரசாங்கத்தின் அழைப்புக்கு ஏற்ப இலங்கையில் விஜயத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதற்கு மேலதிகமாக பலவந்தமாகவோ, சுயவிருப்பமின்றி இடம்பெறும் காணாமல் போதல் குறித்த செயற்பாட்டுக்குழுவும் Special Rapporteur on Torture and other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment and the Special Rapporteur on the Situation of Human Rig hts Defenders இலங்கைக்கான விஜயத்தில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறான விஜயங்கள் மூலம் தமது மக்களின் மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள நேர்மையான செயற்பாடுகள் தெளிவாகின்றது என்றும் பிரதிநிதி சுட்டிக்காட்டினார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு பின்னர் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள சிறந்த செயற்பாடுகள் சம்பந்தமாக விசேட பிரதிநிதி சமர்ப்பித்துள்ள விடயங்கள் தொடர்பில் இலங்கை மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.



இதேபோன்று இலங்கை அரசாங்கம் மனித உரிமையை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல், நல்லிணக்கம் தொடர்பாக முன்னெடுத்துவரும் செயற்பாடுகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் தெளிவுபடுத்தியிருந்தார்.

நபர்கள் இம்சைக்குள்ளாக்கப்படுதலை, முற்றாக இல்லாதொழிப்பதற்கான கொள்கை ஒன்றின் அடிப்படையில் சமகால தேசிய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இம்சைகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு எதிரான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்த நடைபவனியில் ஜனாதிபதி கலந்து கொண்டமை, அரசாங்கம் கடைப்பிடித்துள்ள கொள்கைக்கு ஊக்கமளிப்பதே ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று 2017 தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரை ஐந்து வருட காலப்பகுதிக்காக இலங்கையில் மனித உரிமைகள் செயற்பாடுகளுக்கென கடந்த ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த வருடம் ஜூன் மாதத்தில் பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளுக்கு, இது தொடர்பாக ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.


கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். இவ்வாறான நபர்கள் மனிதாபிமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்ற விடயங்கள் இந்த ஆலோசனைகளில் அடங்கியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# கோத்தபாய இல்லாதொழித்த பாதாள உலகக்குழுக்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன

## உதய கம்மன்பில கூறுகிறார்

(கொழும்பு)

கடந்த அரசாங்க காலத்தில் கோத்தபாய ராஜபக்ஷ பாதாள உலகக் குழுக்களை அடியோடு இல்லாதொழித்ததாகவும் தற்பொழுது அது மீண்டும் தலைதூக்கியுள்ளதாகவும் மகிந்த சார்பு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.



பாதாள உலகக் குழுக்களை இல்லாதொழிக்கத்தேவையான நடவடிக்கைகளை கடுமையாக கோத்தபாய முன்னெடுத்ததனால், சிலர் நாட்டைவிட்டு வெளியே சென்றனர்.

சில பாதாள உலக தலைவர்கள் மௌனம் சாதித்தனர். சில பாதாள உலகக் குழுக்களின் தலைவர்கள் அழித்து ஒழிக்கப்பட்டனர் எனவும் கம்மன்பில எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அம்மா பிள்ளையா? பெண்டாட்டி தாசனா?

தாய் சொல்லே வேதம் என்று மனைவியைப் புழுவிற்குக் கீழே நினைக்கிற மனிதர்களையும் மனைவி பேச்சைக் கேட்டுக் கொண்டு தாய்க்கு அடிப்படைத் தேவைகளைக் கூடச் செய்து தராமல் பாடாய்ப் படுத்துகிற மனிதர்களைப் பற்றியும் தாம் நாம் தினம் தினம் கேள்விப்படுகிறோம்; பார்க்கிறோமே!

ஏன் இவர்களால் நிதானமானவர்களாக நடந்து கொள்ள முடிவதில்லை? யோசிக்க வேண்டிய விடயம்.

பெற்றவள்; வளர்த்தவள்; தனக்காக எவ்வளவோ தியாகங்களைச் செய்தவள் என்பதெல்லாம் சரி. அதற்காக நாம் வாழ்நாள் முழுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அதற்காக ஒரு கண்ணில் வெண்ணெயும் மறு கண்ணில் சுண்ணாம்புமாய், சினிமா மாமியார் மாதிரித் தன் மருமகளை நடத்துவதை ஒரு கணவன் பார்த்துக் கொண்டு கையைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இந்த விடயத்தில் எதிர்ப்பையும் ஆட்சேபத்தையும் இலேசாகக்கூட வெளிப்படுத்தத் தயங்குற எந்தக் கணவனும் தன் தாயை மேலும் அநீதிகளைச் செய்யத் தூண்டுகிறான் என்பதே பொருள்.

அம்மாக்காரியோடு சேர்ந்து கொண்டு ஆட்டம் போட்டுத் தீர்க்கிற மனிதர்கள் மேலும் மோசமான பிறவிகள்.

மனைவிமீது பல மனக்குறைகள் இருக்கலாம். அதைச் சரி செய்து கொள்ள முரட்டு முறைகள் சரிப்பட்டு வரா. சிகரெட்டால் சுடுவதிலிருந்து வார்த்தையால் சுடுவது வரை எதுவுமே நிரந்தரத் தீர்வாகாது. மாறாக இச் செயலினை அதிகப்படுத்தவே செய்யும்.

முதல் கட்டமாக அம்மாக்காரியைச் சரி செய்து அம்மா அணுமுறையை மாற்றிப் பார்ப்போம் என இறங்க வேண்டும். மனைவிக்குத் தீங்கிழைக்கும் எந்தக் கணவனும் ஒரு நல்ல தந்தையாகவும் விளங்க முடியாது. இத்தகையவன் தன் மனைவியை இழப்பதோடு, தன் வாரிசுகளையும் இழக்கிறான்.

இவ்வளவு தீவிரமாக இல்லாமல், அம்மா சொன்னால்தான் சினிமா, அம்மா சொல்கிற பள்ளியில் தான் பிள்ளைகளைச் சேர்க்கணும், அம்மா சொல்கிற போதுதான் நீ உங்க அம்மா வீட்டுக்குப் போகணும் என்று சட்டம் பிள்ளைத்தனமாக நடந்து கொள்வதையெல்லாம் ஏறக் கட்ட வேண்டும்.

மனைவி பேச்சைக் கேட்டுக் கொண்டு தாயை உதாசீனப்படுத்துகிறவர்கள் ஓர் இரகம். தாயை மட்டுமல்ல தன்னுடன் பிறந்தவர்களையெல்லாம் ஆகாமல் அடித்து விட்டு மனைவி வழிச் சொந்தத்தோடு ஐக்கியமாகி சொந்த புத்தி, சுய புத்தி அடகு வைத்து விடுகிறவர்கள் இவர்கள்.

எந்த ஒரு செயலிலும் நியாயம் இருக்க வேண்டும் . இது காரண காரியத்தோடும் அமைய வேண்டும். தாய் சொன்னாலோ தாரம் சொன்னாலோ அது இராணுவ கட்டளையல்ல ஏன்? எதற்கு என்ற கேள்விகளுக்கு இராணுவத்தில் தான் இடமில்லை. குடும்பத்தில் நிச்சயம் எழுதப்பட வேண்டும்.


யார் இதைச் சொன்னார்கள் என்பதல்ல முக்கியம். ஏன் இதைச் சொன்னார்கள் என்பதே முக்கியம். நம்மவர்களைப் பொறுத்து நியாயங்களை மாற்றிக் கொள்ளக்கூடாது. நாம் நாமாக இருக்க வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# 'ஜெ' அப்பலோவுக்கு கொண்டு வரப்பட்டபோது...

# உடையும் மர்மங்கள்

## சிக்குவாரா சசிகலா?





ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் புகார் அளிக்கும் ஓ.பி.எஸ். ஆதரவு எம்.பிக்கள்

ஜெயலலிதா மரணத்தில் உள்ள மர்ம முடிச்சுகள் மெள்ள மெள்ள அவிழ ஆரம்பித்துள்ளன. 'கூட்டாளிகள் பிரிந்தால்தான் களவாணி வெளிப்படுவான்' என்பார்கள். அ.தி.மு.க. இரண்டுபட்டதால் ஜெயலலிதாவின் மரணம் குறித்த மர்மம் வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்துள்ளது. ஜெயலலிதாவின் மர்ணத்தில் சில இருண்ட பக்கங்கள் இருப்பதாக முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சொல்ல ஆரம்பித்துள்ளார்.

அவருக்கு ஆதரவாக இருக்கும் 12 எம்.பிக்கள் கடந்த 27 ஆம் திகதி அன்று டில்லியில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியைச் சந்தித்து, 'ஜெயலலிதா மரணம் தொடர்பாக சி.பி.ஐ விசாரணை நடத்த வேண்டும்' என்று மனு அளித்து பரபரப்பை ஏற்படுத்தினார்கள்.

'குற்றவாளியை நெருங்கிவிட்டோம்' என்கிறார் பி.எச். பாண்டியன். தமிழக அரசியல் மீண்டும் இப்போது ஜெயலலிதா மரணத்தையொட்டிய கொந்தளிப்பில் இருக்கிறது.

### 27 கமராக்கள் நிறுத்தப்பட்டன!

ஜனாதிபதியைச் சந்தித்த எம்.பி.மைத்ரேயன் கூறும்போது...“செப்டெம்பர் 22 ஆம் திகதி அப்பலோவில் முதல்வர் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டார். அவருக்கு நீர்ச்சத்து குறைபாடு, காய்ச்சல் என்று மட்டும் சொன்னார்கள். அதன் பிறகு, 75 நாட்கள் யாரையும் பார்க்கவிடாமல் தடுத்துவிட்டு, திடீர் என அவர் இதயத் துடிப்பு முடக்கத்தால் மரணம் அடைந்துவிட்டதாகக் கூறினார்கள். இது சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம். 'பிசியோதெரபி சிகிச்சை எடுத்துக் கொள்கிறார்', 'இட்லி சாப்பிடுகிறார்' என்று சொல்லிவிட்டு, அவருக்கு 'செப்டிசீமியா' என்ற நோய் இருப்பதாக அடுத்து அறிக்கைவிட்டது எதனால்? சசிகலாவைத் தவிர யாரையும் அந்த அறைக்குள் அனுமதிக்கவில்லை.

செப்டிசீமியா இருந்தாலும் ஒரு சிலரையாவது உரிய பாதுகாப்புக் கவசங்களுடன் அறைக்குள் அனுப்பியிருக்கலாம். அதைத் தவிர்த்தது ஏன்? ஜெயலலிதா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டபோது, அப்பலோவில் இருந்த 27 சி.சி.டி.வி கமராக்கள் செயல் இழக்க வைக்கப்பட்டுள்ளன. ஏன் அப்படிச் செய்யப்பட்டது?

சென்னை உயர் நீதிமன்றத்தில் அப்பலோ வைத்தியசாலை சார்பில் தாக்கல் செய்த மனுவில், 'இனிமேல் காப்பாற்ற முடியாது என்ற சூழ்நிலையில் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகளை ஒப்புதலோடு நிறுத்தினோம்' என்று சொல்லியுள்ளார்கள். யாருடைய ஒப்புதலோடு சிகிச்சைகள் நிறுத்தப்பட்டன என்பது பொதுமக்களுக்குத் தெரிய வேண்டாமா? இத்தகைய சந்தேகங்களைத் தொகுத்து ஜனாதிபதியிடம் கொடுத்துள்ளோம். 'சி.பி.ஐ. விசாரணை நடத்தி உண்மையை வெளிக்கொண்டுவர வேண்டும்' என்று கேட்டோம். ஜனாதிபதியும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

நாங்கள் சொன்னதை கவனமாகக் கேட்டார். சில விபரங்களைக் குறித்துக் கொண்டார். விரைவில் சி.பி.ஐ. விசாரணை குறித்த அறிவிப்பு வெளியாகும். ஜெயலலிதா மரணத்தின் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளியே கொண்டு வரும் வரை ஓயமாட்டோம்” என்றார் மைத்ரேயன்.

### விரைவில் சி.பி.ஐ. விசாரணை!

அ.தி.மு.க-வின் எம்.பிக்கள் குழு ஜனாதிபதியுடன் நடத்திய சந்திப்புக்குப் பின்னால், மத்திய அரசின் ஒப்புதலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். “ஜெயலலிதா மரணம் குறித்து பிரதமர் மோடிக்கு சந்தேகங்கள் உள்ளன. ஜெயலலிதாவைப் பார்க்க வருவதாக இரண்டு முறை மோடி சொன்னார்.

இரண்டு முறையும் தடுத்தார்கள். எனவே, உள்விடயங்களை மோடியும் அறிவார். மேலும், சசிகலா குடும்பத்தினர் அ.தி.மு.கவைக் கைப்பற்றத் துடிப்பதை மோடி ரசிக்கவில்லை. உத்தரப் பிரதேச தேர்தல் முடிந்த பிறகு, தமிழக அரசியலில் மோடியின் பார்வை இருக்கும். அதற்கான முன்னோட்டம்தான் இந்தச் சந்திப்பு” என்று டில்லி வட்டாரங்கள் சொல்கின்றன. இரண்டு மாதங்களில் இதற்கான வேலைகள் ஆரம்பம் ஆகும் என்றும் சொல்கிறார்கள்.

### அப்பலோவுக்கு கொண்டுவரும்போதே...

ஜெயலலிதா மரணத்தில் மர்மம் இருப்பதாக தொடர்ந்து சொல்லி வருகிறார்கள் முன்னாள் சபாநாயகர் பி.எச். பாண்டியனும், அவரின் மகன் மனோஜ் பாண்டியனும். முன்னாள் எம்.பியான மனோஜ் பாண்டியன் கூறும்போது...

“அப்பலோ வைத்தியசாலை தந்த ஜெயலலிதாவின் டிஸ்சார்ஜ் அறிக்கையில், 'அவர் கீழே விழுந்துதான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்' என்று தெரிவித்து உள்ளார்கள். அப்படியானால், 'அவர் எங்கே, எப்படி கீழே விழுந்தார்? அவராக விழுந்து விட்டாரா? அவரை யார் தள்ளி விட்டது? எதற்காகத் தள்ளி விட்டார்கள்? அதற்கு என்ன நோக்கம்?' என்பதை விளக்க வேண்டும்.

போயஸ் கார்டனில் இருந்து டிஎஸ்பி ஒருவர்தான் அப்பலோவின் 1066 என்ற அம்புலன்ஸ் எண்ணுக்கு போன் செய்து அம்புலன்ஸை வரவழைத்துள்ளார். அந்த அம்புலன்ஸ், போயஸ் கார்டன் வீட்டுக்குள் நுழைந்ததும், ஜெயலலிதா அதில் ஏற்றப்பட்டதுமான காட்சிகள் கொண்ட சி.சி.டி.வி. பதிவுகள் எங்கே? அப்பலோ வைத்தியசாலையில் இருந்து சென்ற அம்புலன்ஸில்தான் ஜெயலலிதா அழைத்துவரப்பட்டார் என்றால், அவருடன் பயணம் செய்தவர்கள் யார், யார்? அம்புலன்ஸில் செல்லும் அளவுக்கு சீரியஸ் என்றால், அம்புலன்ஸ் உடனே புறப்படாமல் தாமதம் செய்யப்பட்டது ஏன்?

போயஸ்கார்டனுக்கு அம்புலன்ஸ் சென்ற அடுத்த சில மணி நேரத்தில் அப்பலோ வைத்தியசாலையின் வெளியே, உள்ளே, இரண்டாம் தளம் ஆகியவற்றில் இருந்த 27 சி.சி.டி.வி. கமராக்கள் செயல் இழக்க வைக்கப்பட்டுள்ளன. இதற்கு என்ன காரணம்? அப்பலோவில் கமராக்கள் அகற்றப்பட்டாலும், போயஸ் கார்டன் உள்ளேயும் வெளியேயும் கமராக்கள் உள்ளன. அந்த கமராவில் பதிவான காட்சிகளை ஏன் இதுவரை வெளியிடவில்லை? எது எதற்கோ அறிக்கை விடுபவர்கள், இதற்கு பதில் சொல்லி அறிக்கை விடாததன் மர்மம் என்ன?

ஜெயலலிதாவின் உடல் நிலையைக் கவனித்துக் கொண்டிருந்த தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சாந்தாராம், 2016 மே மாதமே 'உங்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் சரியில்லாமல் இருப்பதால் பக்கவாதம் வரப்போகிறது' என்று எச்சரித்துள்ளார். அதன்பிறகு அவரை போயஸ் கார்டன் பக்கமே அனுமதிக்காத மர்மம் என்ன? 2016 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பித்து, ஜெயலலிதா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட செப்டெம்பர் மாதம் வரை அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையில் நிறைய மர்மங்கள் புதைந்து கிடக்கின்றன. இந்தக் காலகட்டத்தில்தான் அவரது உடலில் சர்க்கரை அளவு உச்சபட்ச நிலையில் இருந்துள்ளது. இதற்கு என்ன சிகிச்சைகள் அளித்தார்கள்?

2015 ஆம் ஆண்டு மே மாதமே ஜெயலலிதாவின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், மத்திய அரசு அனுமதியோடு அவரை சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல 'பாரா அம்புலன்ஸ் ஹெலிகொப்டர்' சென்னை விமான நிலையத்தில் காத்திருந்தது. ஆனால், அந்தப் பயணத்தை இரத்து செய்தது யார்?

அப்பலோ வைத்தியசாலையில் அவருக்கு அளிக்கப்பட்ட உணவுகள் சோதனை செய்யப்பட்டு தரப்பட்டதா? ஜெயலலிதா வைத்தியசாலையில் இருந்த அந்த 75 நாட்களில், அவரைக் காண வந்தவர்கள் பற்றிய விபரங்களை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் எடுத்துச் சென்றுவிட்டதாக சொல்கிறார்கள். அதனை மறைக்கக் காரணம் என்ன? தமிழகத்தில் நடைபெற்ற மூன்று தொகுதி இடைத்தேர்தல்களின்போது, ஜெயலலிதாவின் கைரேகை பெறப்பட்டது. அந்தக்கைரேகை பெறப்பட்டபோது வைத்தியர்கள் பாலாஜியும், ஜான் ஆபிரஹாமும் இருந்துள்ளார்கள். 'இதே போன்று வேறு பத்திரங்களிலும் கைரேகை பெறப்பட்டதா?' என்ற விபரங்களை பாலாஜியிடம் விசாரிக்க வேண்டும்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் அப்பலோ வைத்தியசாலை தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், 'உயிர் இருந்தும் உடல் இயக்கம் செயல் இழந்துவிட்டதால், சிகிச்சைகள் நிறுத்தப்பட்டன' என்று கூறப்பட்டுள்ளது. சிகிச்சைகளை நிறுத்துவதற்கு அனுமதி கொடுத்தது யார்? உடலில் சிறு அறுவைச் சிகிச்சை செய்வதற்கே இரத்த பந்தங்களின் அனுமதி தேவை என்று இருக்கும்போது, ஜெயலலிதாவுக்குச் சிகிச்சையை நிறுத்துவதற்கு யாரிடம் அனுமதி பெற்றார்கள்? எக்மோ உள்ளிட்ட சிகிச்சைகள் மேற்கொள்ள யாரிடம் கையெழுத்து வாங்கினார்கள்? ஜெயலலிதா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பிறகு, அவரின் உடல் எடை 47 கிலோ குறைந்துள்ளது. அதற்குக் காரணம் என்ன?

வெளிநாட்டு வைத்தியர்கள் ஜெயலலிதாவைப் பார்க்க வந்தபோது, சசிகலா மட்டுமே உடன் இருந்துள்ளார். தமிழ் மட்டுமே தெரிந்த சசிகலா, தமிழே தெரியாத வெளிநாட்டு வைத்தியர்களோடு எவ்வாறு உரையாடினார்?

வாஸ்து சீனிவாசன் பரிந்துரை செய்ததன் அடிப்படையில், அப்பலோ வைத்தியசாலையில் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டிருந்த அறையில் அதிரடி மாற்றங்களைச் செய்து, அந்த அறையை இருட்டாக ஆக்கியது ஏன்? ஜெயலலிதாவுக்கு மருந்து கொடுக்கக்கூட, நல்ல நேரம் பார்த்துக் கொடுத்த தவறைச் செய்தது ஏன்?

இப்படி பல்வேறு சந்தேகங்கள் உள்ளன. எங்களைப் பொறுத்தவரையில் அவர் அப்போலோவுக்கு அழைத்து வரப்பட்டபோதே மர்மமான நிலைமையில்தான் இருந்துள்ளார் என்று தெரிகிறது. இந்த இரகசியங்களை கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடுவோம்” என்கிறார் மனோஜ் பாண்டியன்!

### எய்ம்ஸ் மருத்துவர்கள் புலம்பல்!

எய்ம்ஸ் மருத்துவக்குழு அப்போலோ வந்து, ஜெயலலிதாவின் நிலையைப் பார்த்துவிட்டு டில்லிக்குக் கிளம்பிய போது அடித்த கமெண்ட்டை இப்போது சிலர் சொல்கிறார்கள். ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையை 'It is a secret service, not a medical service' என்று அந்த வைத்தியர்கள் சொன்னார்களாம்.

2011 ஆம் ஆண்டு குஜராத் முதல்வராக மோடி இருந்த போது, ஜெயலலிதாவுக்கு உதவியாக ஒரு நர்ஸை அனுப்பியுள்ளார். ஆனால், அவர் சில மாதங்களில் இங்கிருந்து அனுப்பப்பட்டார். அப்போதே மோடி, “உங்களுக்கு அளிக்கப்படும் உணவு விடயங்களில் எச்சரிக்கையாக இருங்கள்” என்று ஜெயலலிதாவிடம் அறிவுறுத்தி உள்ளார். “அதையும் இந்த சம்பவங்களையும் முடிச்சுப் போட்டுப் பாருங்கள்'' என்கிறார்கள் ஒரு தரப்பினர்.

### எப்போதும் வரலாம்!

அப்பலோ வைத்தியசாலை, 'ஜெயலலிதாவின் வைத்தியச் செலவு ஐந்து கோடி ரூபாய்' என்று சொல்லியிருந்தது. ஆனால், அவருடைய சிகிச்சை செலவு 7.8 கோடி ரூபாய் என்கிறார்கள். அதில் உணவுச் செலவு மட்டும் 30 இலட்ச ரூபாய் என்று கணக்குக் காட்டியுள்ளார்கள். “30 இலட்சம் ரூபாய்க்கு உணவுச் செலவு என்றால் தினமும் யார் யாரெல்லாம் அங்கு இருந்தார்களோ, அவர்கள் அனைவரையும் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வர வேண்டும்” என்று ஜனாதிபதியிடம் சொல்லப்பட்டிருக்கிறது. 'சி.பி.ஐ. வரும்போது, சசிகலா குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் சிவகுமாரும் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்படுவார்' என்று நம்பிக்கையோடு சொல்கிறது ஓ.பி.எஸ்.தரப்பு. “கடந்த சில ஆண்டுகளாகவே ஜெயலலிதாவுடன் இருந்த சிவகுமார், சமீப காலமாக எங்கும் தலை காட்டவில்லை. இதுவும் சந்தேகத்தை அதிகப்படுத்துகிறது. வைத்தியசாலையில் சசிகலாவின் நிழலாக இருந்தவர், அவருடைய உதவியாளர் கார்த்திகேயன். அவருக்கும் அனைத்தும் தெரியும்'' என்கிறார்கள் இவர்கள்.


'சி.பி.ஐ., எந்த நேரத்திலும் வந்து வளைக்கலாம்' என்று சொல்கின்றன டில்லி தகவல்கள்.

ஜூனியர் விகடன்

### கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள சோமாலியாவில்

# பட்டினியால் 110 பேர் பலி





கடும் வரட்சியால் சோமாலியாவில் 110 பேர் பட்டினியால் மரணம் அடைந்துள்ளனர். ஆபிரிக்க நாடான சோமாலியாவில் கடும் வரட்சி நிலவுகிறது. இதனால் குடிநீர் மற்றும் உணவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக அங்கு வாழும் 30 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சோமாலியாவின் தென் மேற்கு வளைகுடா பகுதியில் மட்டும் 110 பேர் பட்டினியால் உயிரிழந்த தகவல் வெளியாகியுள்ளது. அதுவும் 48 மணி நேரத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

அங்குள்ள அவ்டின்லே நகரில் ஏராளமானவர்கள் செத்து மடிந்துள்ளனர். அங்கு சுத்தமான குடிநீர் கிடைக்கவில்லை. அதனால் அங்கு கொலரா நோய் பரவி வருகிறது.

இந்த பட்டினிச்சாவு ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்து மட்டும் வெளியாகி உள்ளது. இதுபோன்று நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் உணவின்றி உயிரிழக்கின்றனர். எனவே வரட்சி பாதித்த பேரழிவு நாடாக சோமாலியா ஜனாதிபதி முகமது அப்துல்லாகி பார்மஜோ அறிவித்துள்ளார். உதவி செய்யும்படி அமெரிக்காவில் உள்ள முன்னணி 13 அறக்கட்டளை நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சோமாலியா அடிக்கடி வரட்சியால் பாதிக்கப்படுகிறது. இங்கு கடந்த 1992 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வரட்சி காரணமாக உணவின்றி உயிரிழந்தனர்.

அதேபோன்று 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலும் 2 இலட்சத்து 60 ஆயிரம் பேர் பட்டினியால் மரணம் அடைந்துள்ளனர். (இ-12)

## கென்யாவிலும் கடும் வரட்சி 4 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிப்படையும் அபாயம்




கென்யாவில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக சுமார் நான்கு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிப்படையும் அபாயம் உள்ளதாகவும் அவர்களுக்கு உதவி புரிய சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் எனவும் மனிதாபிமான விவகாரங்கள் தொடர்பான ஐநாவின் துணைச் செயலாளர் ஸ்டெஃபன் ஓபிரியன் (Stephen O'Brien) தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆபிரிக்க விஜயத்தின் போது, அங்குள்ள பின்தங்கிய புறநகரங்களை நேரில் சென்று பார்வையிட்டதாகவும் அதன் போது பல மிருகங்கள் உயிரிழந்து கிடந்தமையை அவர் அவதானித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் வரட்சி காரணமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவபர்கள் தங்களிடம் உள்ள கால்நடைகளை வேறு ஒருவருக்கு விற்று விடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனெனில் கால்நடை வளர்ப்பாளர்கள் அவர்களிடம் உள்ள கால்நடைகளுக்குக்கூட உணவளிக்க முடியாது தவித்து வருவதாகவும் பல கால்நடைகள் பட்டினியால் வாடி உயிரிழந்து விடுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையினால் இதுவரை சுமார் 1.3 மில்லியன் கென்ய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நிலைமை நீடிக்குமாயின் மேலும் 4 மில்லியன் மக்கள் பாதிக்கப்படும்அபாயம்உள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1006

Search for people, places and things Nagendram Home

### கயல்விழி




### மதுரா




### நதியா




### கார்த்தி




### கண்ணா





### புவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இலங்கையின் விமான சேவையை ஆசியாவில் கேந்திர நிலையமாக்குவதே நோக்கம்-நிமால்



(கொழும்பு)


ஆசிய பிராந்தியத்தில் இலங்கையை விமான போக்குவரத்து கேந்திர நிலையமாக தரமுயர்த்துவதே அரசாங்கத்தின் இலக்காகும்.

அதற்கான பணிகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இரத்மலான விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை விமானப்படையின் 66 வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# தற்போதைய சூழ்நிலையில் நாட்டுக்கு புதிய அரசியல் யாப்பு தேவையற்றது

## ரத்ன தேரர் கூறுகிறார்



(கொழும்பு)

தற்பொழுதுள்ள சூழ்நிலையில் நாட்டுக்கு தேவையானது புதிய அரசியல் யாப்பு அல்லவெனவும், தேசிய அபிவிருத்தி திட்டமே எனவும் இலங்கை தேசிய மகா சபையின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.


நாட்டின் பொருளாதாரத்தை சீனாவினதும், இந்தியாவினதும் தேவைக்கு ஏற்ப மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது.

நாட்டின் காணிகளை நினைத்தவாறு வெளிநாட்டவருக்கு வழங்காமல் இருப்பதற்கு, தேசிய காணிக் கொள்கையொன்று வகுக்கப்பட்டு அதன்படி முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தேரர் கூறியுள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு சிலரின் தேவைக்கு ஏற்ப செயற்படக் கூடியவர் அல்ல எனத் தெரிவித்துள்ள தேரர், ஜனாதிபதி தேசியப் பிரச்சினைகளின் போது தீர்மானம் எடுக்க தாமதிக்கும் ஒவ்வொரு பொழுதும் ஆபத்தானது எனவும் சிங்கள வார இதழொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார். (இ-7)

# வடகொரியத் தூதுவரை வெளியேறுமாறு உத்தரவு

## மலேசியா காலக்கெடு



(கோலாலம்பூர்)

மலேசியாவுக்கான வடகொரிய தூதுவரை நாட்டை விட்டு வெளியேற்ற மலேசியா முடிவு செய்துள்ளது.

அடுத்த 48 மணிநேரத்திற்குள் வடகொரிய தூதர் கிம் சோல் மலேசியாவை விட்டு வெளியேற வேண்டுமென கூறப்பட்டுள்ளது.


வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரர் கிம் ஜாங் நாம் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து நடத்தப்பட்ட புலனாய்விற்கு வடகொரியா தெரிவித்த விமர்சனத் திற்கு, அது மன்னிப்பு கேட்க வேண்டுமென மலேசியா கோரியதாக வெளியுறவு அமைச்சர் அனிஃபா அமான் கூறினார்.

மன்னிப்பு கேட்கப்படாததால், மலேசியாவுக்கான வடகொரிய தூதரை நாட்டை விட்டு வெளியேற்ற தீர்மானித் திருப்பதாக அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சமீப காலம் வரை, இந்த இரு நாடுகளும் பொதுவாக நல்லுறவை பேணி வந்துள்ளன.

சட்டபூர்வமற்ற ஆயுத விற்பனை நடவடிக்கையை மூடிமறைக்க மலேசியாவிலுள்ள ஷெல் நிறுவனங்களை வடகொரிய உளவுத்துறை நிறுவனங்கள் பயன்படுத்தியதாக வெளிவந்த தகவல்களுக்கு பிறகு, இந்த தீர்மானம் வந்துள்ளது. (இ-12)

# முதல் குற்றவாளி ஓ.பி.எஸ்



(சென்னை)

ஜெயலலிதாவிற்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பில் சந்தேகம் இருந்தால் அதில் முதல் குற்றவாளி ஓ.பன்னீர்செல்வம் தான் என முன்னாள் அமைச்சரும் அதிமுக செய்தித் தொடர்பாளருமான வைகை செல்வன் தெரிவித்துள்ளார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியாகி வருகின்ற நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்த வைகை செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

பன்னீர்செல்வத்தின் அணியின் உண்ணாவிரத அறிவிப்பு கண்துடைப்பு நாடகம் என்றும் பொது மக்கள் மத்தியில் தவறான தகவல்களை தெரிவித்து, திசை திருப்ப முயற்சிக்கிறார் எனவும் இதன் போது குற்றம் சுமத்தியிருந்தார்.

ஜெயலலிதாவின் மரணம் குறித்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதால் இந்த நேரத்தில் அவரது மரணம் குறித்த தான்தோன்றித்தனமான கருத்துக்களை வெளியிடுவதை ஓ.பி.எஸ். அணியினர் நிறுத்திக்கொள்ள வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜெயலலிதாவிற்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பில் சந்தேகம் இருந்திருந்தால் அப்போது உள்துறை அமைச்சராக இருந்த பன்னீர்செல்வம் தான் முதல் குற்றவாளி எனவும் வைகை செல்வன் சுட்டிக்காட்டினார். (இ-12)

# சிரிய போர் விமானம் விழுந்து நொருங்கியது

## விசாரணை தீவிரம்



(டமாஸ்கஸ்)

சிரிய இராணுவத்துக்கு சொந்தமான போர் விமானமொன்று துருக்கிய எல்லையில் விழுந்து நொருங்கியுள்ளதாக துருக்கிய ஆளுநர் தெரிவித்துள்ளார். இருப்பினும், அதிர்ஷ்டவசமாக விமானி உயிர்தப்பியுள்ளார்.

குறித்த விமானம் துருக்கி எல்லைக்கருகில் பறந்து கொண்டிருக்கும் போது கட்டுப்பாட்டு மையத்துடனான தொடர்பை இழந்ததாக சிரிய தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, அமானொஸ் மலைகளின் மீது விமானத்தின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அடாய் மாகாண ஆளுநர் எர்டால் அடா, கூறியதனை மேற்கோள்காட்டி துருக்கி தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், குறித்த போர் விமானம் எவ்வாறு விபத்துக்குள்ளானது என்பது தொடர்பில் உறுதியான தகவல்கள் வெளியாகாத நிலையில், இவ்விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-12)

# கிம் ஜாங் நாமின் படுகொலை சம்பவத்துடன் மலேசிய எயார்லைன்ஸ் ஊழியருக்கு தொடர்பு



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்- உன்னின் சகோதரர் கிம் ஜாங் நாமின் கொலையுடன், மலேசிய ஏயார்லைன்ஸ் விமான ஊழியரான 37 வயதுடைய கிம் யக்கு தொடர்பு இருப்பதாக கூறி பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர மேலும் 4 பேர் கொலை நடந்தவுடன் வடகொரிய தலைநகர் பியாங்யாங்குக்கு தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் வி எக்ஸ் என்ற விஷ இரசாயன பொடி வீச்சால் கிம் ஜாங் நாம் கொலை செய்யப்பட்டார்.


இது தொடர்பில், இந்தோனேசியா மற்றும் வியட்நாமை சேர்ந்த 2 பெண்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது கொலை வழக்கு மற்றும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கொலையில் வட கொரியாவை சேர்ந்த ரீ ஜாங்-சோல் உள்ளிட்ட 8 பேரை மலேசிய பொலிஸார் சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில் போதிய ஆதாரம் இல்லை எனக் கூறி ரீ ஜாங்-சோல் விடுவிக்கப்பட்டு வடகொரியா அனுப்பப்பட்டார்.

இக்கொலை சம்பவம் தொடர்பில் இதுவரை குற்றவாளியை இனங்காண முடியாமல் மலேசிய பொலிஸார் திணறி வருகின்ற நிலையில், மிக விரைவில் குற்றவாளியை நீதியின் முன் நிறுத்த வேண்டுமென தென் கொரியா மற்றும் அமெரிக்கா தொடர்ந்தும் மலேசியாவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது. (இ-12)

# தலைவிதியை நிர்ணயிக்கும் தலைப்புகள்

**தொழில் ரகசியம்**




ஆங்கிலம் பேச கற்றுத் தரும் கல்வியகத்தின் பத்திரிகை விளம்பர தலைப்பு இது. 'ஆங்கிலத்தில் பேச பயமா?'
அதே பத்திரிகையில் இன்னொரு கல்வியகத்தின் விளம்பர தலைப்பு இது. 'ஆங்கிலம் பேசும்போது கீழ் கண்ட தவறுகளை செய்கிறீர்களா?'

இரண்டு விளம்பரங்களும் ஒரே பத்திரிகையில் ஒரே அளவில் வெளியாயின. 2 விளம்பரங்களிலும் சொல்லப்பட்ட விடயங்கள் ஏறக்குறைய ஒன்றுதான். இருந்தும் ஒரு கல்வியகத்தின் விளம்பரம் அதிக எண்ணிக்கையில் மக்களை ஈர்த்தது. அது எந்த விளம்பரமாக இருக்கும்?

இரண்டாவது விளம்பரம்! ஏனெனில் அதன் தலைப்பு படிப்பவர்களின் கவனத்தை கவர்கிறது. ஏதோ தவறான வார்த்தைகளாமே, அதை பேசி தொலைக்கிறோமோ என்று விளம்பரத்தை முழுவதும் படிக்கும் ஆர்வத்தை தூண்டுகிறது.

அதற்காக முதல் விளம்பரத்தின் தலைப்பு தவறு என்று சொல்லவில்லை. இரண்டாவது விளம்பர தலைப்பு தன் வேலையை சரியாய் செய்கிறது என்கிறோம்.

பத்திரிகை விளம்பரத்தின் தலையெழுத்தை நிர்ணயிப்பது அதன் தலைப்பு. விளம்பரத்திலுள்ள படம், விலாவரியான விளக்கம் எல்லாம் அவசியம் தான். ஆனால் பத்திரிகை படிக்கும் போது நம் கண்கள் தேடுவது தலைப்புகளை. பத்திரிகையில் வரும் எல்லா செய்திகளையும் நாம் படிப்பதில்லை. எந்த தலைப்பு கவனத்தை கவர்கிறதோ அச்செய்தியை மட்டும் முழுவதும் படிக்கிறோம். அப்படித்தான் விளம்பரங்களையும் கவனிக்கிறோம். விளம்பர தலைப்பு நம் கவனத்தை கவர்ந்தால் அந்த விளம்பரத்தை முழுவதும் பார்க்கிறோம், படிக்கிறோம். மற்ற விளம்பரங்களை விட்டுவிடுகிறோம்!

சரியான தலைப்பு இருந்தால் தீர்ந்தது பாதி பிரச்சினை. மீதிக்கு மட்டும் முயற்சி போதுமானது. சரியான தலைப்பு என்றால் என்ன? அதை எப்படி எழுதுவது?

நம் அனைவருக்கும் சுயநலமே பிரதானம். நம் தேவையும் அதை பூர்த்தி செய்வதும் தான் முக்கியம். நம் தேவைகளை, நம்மை முதலில் நன்றாக கவனித்துவிட்டு பிறகு தான் மற்றவர்களைப் பற்றி சிந்திப்போம். ராசி பலன் பார்க்கும் போது கூட நம் ராசியைத் தான் முதலில் பார்க்கிறோம். பிறகு தான் நாம் நேசிப்பவர்கள் ராசியை படிக்கிறோம். இதை தவறு என்று சொல்லவில்லை. இது தான் நாம், இதுவே நம் குணம்.

சரி. இதற்கும் விளம்பர தலைப்புக்கும் என்ன சம்பந்தம்? அதற்குத் தான் வருகிறோம். பிராண்ட் என்பது என்ன? வாடிக்கையாளர் தேவைக்கு தீர்வு. அதனாலேயே பிராண்ட் அவர் கண்ணில் பளிச் சென்று படுகிறது. விளம்பரமும் அவர் கண்ணில் பளீரென்று பட வேண்டும் என்றால் அது வாடிக்கையாளரை, அவர் தேவைக்கான தீர்வை, அவர் தன்நலத்தை பிரதி பலிக்கும் வகையில் இருப்பது தானே முறை?

பிராண்ட் பற்றிய புதிய செய்தியோ அல்லது பிராண்டே புதியதாக இருந்தால் அதையே விளம்பர தலைப்பாக்குவதும் வாடிக்கையாளர் கவனத்தை ஈர்க்கும் வழி. 'அறிமுகம், கொசு வராமல் தடுக்கும் புதிய ஜன்னல் ஸ்க்ரீன்' என்று 'விளம்பரத்தில் கூறும் போது 'நாராயணா இந்த கொசு தொல்லை தாங்க முடியல' என்று புலம்புவர் கண்ணில் பட்டு 'அட, கொசு தொல்லையிலிருந்து தப்பிக்க புதுசா ஏதோ வந்திருக்கே, என்னவென்று பார்ப்போம்' என்று தெரிந்துகொள்ளும் ஆர்வத்தை தூண்டி விளம்பரத்தை முழுவதும் படிக்க வைக்கிறது!

விளம்பர தலைப்பு எழுதும் முன் பிராண்ட் என்ன பயன் தருகிறது, எதனால் வாடிக்கையாளர் வாங்குகிறார், என்ன கூறினால் நம் பிராண்டை வாங்குவார் என்பதை தெளிவாக அறிந்துகொண்டு பிறகு எழுதத் தொடங்குவது உசிதம்.

விளம்பரங்களை உருவாக்குகையில் பலர் வாசகங்களை முதலில் எழுதிவிட்டு, படத்தை முடிவு செய்து இறுதியில் விளம்பரத்திற்கு நல்ல தலைப்பை தேடுவார்கள். இது தப்பாட்டம். நாம் ஏற்கெனவே பார்த்தது போல் பத்திரிக்கை படிப்பவர்களை முதலில் கவர்வது தலைப்பு, விளம்பர வாசகங்கள் அல்ல. வாடிக்கையாளர் தன்னை, தன்னலத்தை, தனக்குத் தேவையானதை தலைப்பில் பார்த்து 'சரி இந்த விளம்பரம் நமக்குத் தான்' என்று தெரிந்துகொண்ட பின் தான் விளம்பரத்திற்குள் நுழைவார். நுழைந்த பின் தான் விளம்பர வாசகங்களை படிப்பார்.

அதனால் விளம்பர தலைப்பு சரியில்லாத போது, அது வாடிக்கையாளரை ஈர்க்காது. அதன் பிறகு கீழே இருக்கும் விளம்பர வாசகங்களை கம்பரோ, கண்ணதாசனோ எழுதினால் கூட கட்டாயம் யாரும் படிக்கப்போவதில்லை!

தலைப்பு எப்படி எழுதுவது என்பதை பார்த்தது போல் எப்படி எழுதக் கூடாது என்பதை பார்ப்போம். தலைப்பு தொடர் நாடகம் போல் இழுக்காமல், சுருக்கமாக சிக்கென்று சிக்கனமாக எழுதுவது, பலரை கவர்ந்து இழுக்கும். இன்று நம்மில் பலருக்கு பொறுமை இல்லை. வேறு வேலை இருக்கிறதோ இல்லையோ மொத்த பத்திரிகையையும் மூன்று நிமிடம் தான் படிக்கிறோம். தலைப்பு நச்சென்று இருந்தால் தான் கீண்களில் படுகிறது. மனதில் அமர்கிறது.

தலைப்பை எழுதும் போது எல்லோருக்கும் தெரியும், எளிதில் புரியும் வார்த்தைகளை பயன்படுத்துவது நல்லது. 'பரிணாம தாற்பர்யங்களின் திறனாய்வுப் பெட்டகம்' என்பது போன்ற தலைப்பு எழுதினால் யாருக்காவது புரியுமா? உங்களுக்கே முதலில் புரிந்ததா? எழுதிய எனக்கே புரியவில்லையே. யாரையோ கெட்ட வார்த்தையில் வைவது போல் இருக்கும் இது போன்ற தலைப்பை படித்த பின் யாராவது விளம்பரத்தை மேலே படிப்பார்களா?

இத்தனை நேரம் தலைப்பு எழுதும் விதம், எழுதக்கூடாத விதம் பற்றிப் பார்த்தது நீங்கள் உட்கார்ந்து விளம்பரம் எழுத அல்ல. அதை எழுதுபவர்கள் கொண்டு வந்து உங்களிடம் தரும் போது நீங்கள் கவனிக்க வேண்டிய விடயங்களை மட்டுமே. விளம்பரத்தை உங்கள் வாடிக்கையாளர்கள் படித்து, புரிந்து, உங்கள் பிராண்டை வாங்கவேண்டும் என்று ஆசையிருந்தால் விளம்பரங்களை நீங்களே எழுதித் தொலைக்காதீர்கள். அந்த வேலையை தேர்ந்த விளம்பர நிபுணர்களிடம் அளியுங்கள். எழுதும் ஆசையிருந்தால் கதை எழுதுங்கள், கட்டுரை எழுதுங்கள். ஸ்ரீராம ஜெயம் எழு துங்கள். விளம்பரம் எழுதி வியா பாரத்திற்கு வில்லங்கம் விளை விக்காதீர்கள்!

புடவைத் தலைப்பில் மயங்கி புடவையைப் பிரித்து காட்டச் சொல்லும் பெண்களைப் போல் தான் விளம்பர தலைப்புகளும். அதை வாடிக்கையாளர் கவனத்தில் படும்படி எழுதினால் விளம்பர புடவையை அவரே பிரித்து பார்த்து, புரிந்துகொண்டு பிராண்டையும் வாங்குவார். விளம்பரத்தின் தலையெழுத்தை மட்டுமல்ல உங்கள் வியாபாரத்தின் தலையெழுத்தையும் நிர்ணயிப்பது விளம்பர தலைப்புகளே!

## BPPL ஹோல்டிங் ஆரம்ப பங்கு வழங்கல்

BPPL ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனம், அந்நிறுவனத்தின் 10 வீத பங்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், ஆரம்ப பங்கு வழங்கல் (IPO) ஊடாக பங்கொன்று 12 ரூபாய் என்ற ரீதியில் 30,685,000 பங்குகளை வழங்கி 368,220,000 மில்லியன் ரூபாய் நிதியை சேகரித்துக் கொள்ளவுள்ளது. வழங்கல் விலையில் சந்தை மூலதனம் ரூ. 3.7 பில்லியன் ஆகும்.

இந்த பங்கு வழங்கல் மூலமாக, BPPL நிறுவனத்தில் அதன் உரிமைத்துவத்தை 23.4% இலிருந்து 13.4% வீதமாகக் குறைத்துக்கொள்ளும் Hirdaramani இன்வெஸ்ட்மன்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பங்குகள் விற்பனை செய்யப்படவுள்ளன. இந்நிறுவனத்தில் Infinity கெப்பிட்டல் (பிரைவெட்) லிமிடெட் மற்றும் LOLC இன்வஸ்ட்மன்ட் லிமிடெட் ஆகியன முறையே 50.3% மற்றும் 26.3% பங்குகளைத் தக்க வைத்துக்கொண்டுள்ளன. தற்போதைய பங்கு உரிமைத் தாரர்கள் ஆரம்ப பட்டியலிலிருந்து குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு நிறுவனத்தினுள் நிலைத்திருப்பர்.




இந்த ஆரம்ப பங்கு வழங்கலானது, 2017 மார்ச் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு முடிவுத்திகதிக்கு முன்னதாக மிகையாக வாங்கப்பட்டால் தவிர, 2017 மார்ச் 24 -ம் திகதி முடிவடையவுள்ளது. கடந்த பெப்ரவரி 21-ம் திகதி தொடக்கம் ஆரம்ப பங்கு வழங்கல் ஆவ ணப் படிவங்களைப் பெறலாம்.




## லங்கா அசோக் லேலண்ட் வ.பி.இலாபம் ரூ.165.7 மில்.

வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள லங்கா அசோக் லேலண்ட் நிறுவனம் கடந்த ஆண்டு வரிக்கு பிந்திய இலாபமாக 165.7 மில்லியன் ரூபாவை ஈட்டி சாதனை நிலைநாட்டியுள்ளது என நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நிறுவனம் 2016ம் ஆண்டு மொத்த வருமானமாக 7.63 பில்லியன் ரூபாவை ஈட்டியிருந்தது.

அதுமட்டுமல்லாமல் இவ்வருடம் கடந்த 12 மாதங்களின் பின்னர் 1692 புதிய வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,138.14 | 6,101.51 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,553.11 | 3,524.77 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 6,128.872

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** எஸ்.எம்.பி லீசிங்(0.30), சிலோன் பிறின்டர்ஸ்(61.00), சிங்கர் இன்ட்(144.70), அமானா தகபுல்(0.70), சிங்கர்(144.90).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** சிஜஎப்எல்(70), லக்கி லங்கா(2.40), த பினான்ஸ் கோ(4.90), நேசன் லங்கா(1.00), ரெஸ்அக்ரோ(1.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## முதலீட்டு கருத்தரங்கு

பங்குச் சந்தைமுதலீட்டாளர்களுக்கு சமகால விடயங்களை உள்ளடக்கி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை சிரேஸ்ட நிதிப் பகுப்பாய்வாளர் சு.ரகுராம் (CFA Level 3 , CIMA) - NDB குழுமம், அவர்களால் பங்குப் பரிவர்த்தனை கேட்போர்கூடத்தில் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

பங்குபற்ற ஆர்வமுடையோர் 147-2/3, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள யாழ்கிளையில் அல்லது 0777822014 / 222 1455 எனும் இலக்கங்களின் ஊடாக முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளை முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 149.29 | 153.16 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 182.42 | 188.81 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 155.99 | 162.09 |
| சுவிஸ் பிராங் | 146.42 | 152.38 |
| கனேடிய டொலர் | 110.77 | 115.27 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.72 | 116.82 |
| சிங்கப்பூர் டொலர் | 105.14 | 109.06 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.26 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# உழைப்பே அதிர்ஷ்டம்

ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றி கவலையாக இருந்தார். ஒரு நாள் அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார்.

அது மட்டுமல்லாமல் அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக் கொள்ளும் படிசொல்லி விட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக்காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன் பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு வேளை, அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்கு பதிலாக "ஓரடி" என்று சொல்லி விட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில் இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

"இவ்வளவு தூரம் வந்த பின் விட்டு விட முடியுமா" என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!

அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் "சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்" என்று எண்ணினார்கள்.



அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள்தங்கள் நேரத்தை பயனுள்ளதாக மாற்றினார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை இலாபம்.

இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

நீதி : நம் உழைப்பால் வரும் பயன் தான் மிகப் பெரிய புதையல்




- 1079 - ஓமார் கயாம் ஈரான் நாட்காட்டியை அமைத்து முடித்தார்.
- 1447 - ஐந்தாம் நிக்கலாஸ் திருத்தந்தை ஆனார்.
- 1479 - கனாரி தீவுகளை போர்த்துக்கல் காஸ்டில் பேரரசுக்கு வழங்கியது.
- 1521 - பேர்டினண்ட் மகலன் குவாம் தீவை அடைந்தார்.
- 1788 - கைதிகளைக் குடியமர்த்தும் திட்டத்தில் முதற்படியாக முதலாவது தொகுதி கைதிகள் அடங்கிய கப்பல் நோர்போக் தீவை அடைந்தது.
- 1790 - மதுரை மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- 1836 - டெக்சாசில் அலாமோ நகரை மெக்சிக்கோ படைகள் தாக்கிக் கைப்பற்றினர்.
- 1869 - திமீத்ரி மென்டெலீவ் தனது முதலாவது ஆவர்த்தன அட்டவணையை சமர்ப்பித்தார்.
- 1940 - குளிர்காலப் போர்: பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் தற்காலிகப் போர் ஓய்வு ஒப்பந்தம் ஏற்பட்டது.
- 1946 - வியட்நாம் போர்: ஹோ சி மின் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி பிரான்ஸ் வியட்நாமை பிரெஞ்சு ஒன்றியம் மற்றும் இந்தோசீனக் கூட்டமைப்பினுள் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பகுதியாக ஏற்றுக் கொண்டது.
- 1953 - ஸ்டாலினின் மறைவையடுத்து சோவியத்தின் பிரதமராகவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை செயலாளராகவும் கியோர்கி மாலென்கோவ் பதவியேற்றார்.
- 1957 - ஐக்கிய இராச்சியக் குடியேற்ற நாடுகளான கோல்ட் கோஸ்ட் மற்றும் பிரித்தானிய டொகோலாந்து ஆகியன இணைந்து கானா குடியரசு என்ற பெயரில் விடுதலை பெற்றன.
- 1964 - காசியஸ் கிளே தனது பெயரை அதிகார பூர்வமாக முகமது அலி என மாற்றிக் கொண்டார்.
- 1967 - திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1975 - ஈரானும் ஈராக்கும் தமது எல்லை தொடர்பாக உடன்பாட்டிற்கு வந்தன.
- 1987 - பிரித்தானியாவின் எம்எஸ் ஹெரால்ட் என்ற கப்பல் கவிழ்ந்ததில் 193 பேர் கொல்லப் பட்டனர்.
- 2007 - இந்தோனேசியாவின் சுமாத்ராவில் இடம்பெற்ற இரண்டு அடுத்தடுத்த நில நடுக்கங்களில் 70 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1475 - மைக்கலாஞ்சலோ, இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியர் (இ. 1564)
- 1508 - ஹமாயூன், இரண்டாவது முகலாயப் பேரரசர் (இ. 1556)
- 1806 - எலிசபெத் பிரௌனிங், ஆங்கிலேயக் கவிஞர் (இ. 1861)
- 1869 - சேர் ஜேம்ஸ் எமர்சன் டென்னெண்ட், எழுத்தாளர், பயணி, இலங்கைக்கான பிரித்தானிய காலணித்துவ செயலாளர் (பி. 1804)
- 1927 - கபிரியேல் கார்சியா மார்க்கேஸ், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற கொலம்பிய எழுத்தாளர் (இ. 2014)
- 1937 - வலன்டீனா டெரெஷ்கோவா, சோவியத் விண்வெளி வீரர், விண்ணுக்குச் சென்ற முதற் பெண்
- 1948 - ஸ்டீவன் சுவார்ட்சு, அமெரிக்கப் பாடலாசிரியர், இசையமைப்பாளர்
- 1953 - மாதவ் குமார் நேபாள், நேபாளத்தின் 34வது பிரதமர்
- 1954 - ம. சா. அறிவுடைநம்பி, தமிழ்ப் பேராசிரியர் (இ. 2014)
- 1972 - சக்கீல் ஓனீல், அமெரிக்கப் பாடகர்

இறப்புகள்

- 1866 - வில்லியம் ஹியூவெல், ஆங்கிலேய வரலாற்றாளர், மெய்யியலாளர் (பி. 1794)
- 1900 - காட்லீப் டைம்லர், செருமானியத் தொழிலதிபர் (பி. 1834)
- 1939 - லிண்டெமன், செருமானியக் கணிதவியலாளர் (பி. 1852)
- 1973 - பெர்ல் பக், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (பி. 1892)
- 1981 - ஜார்ஜ் கிரே, ஆங்கிலேயத் துடுப்பாளர் (பி. 1893)
- 1982 - அய்ன் ரேண்ட், உருசிய-அமெரிக்க எழுத்தாளர் (பி. 1905)
- 1986 - ஜோர்ஜியா ஓ"கீஃப், அமெரிக்க ஓவியர் (பி. 1887)
- 2000 - எஸ். ஆறுமுகம், ஈழத்துப் பொறியியலாளர், எழுத்தாளர் (பி. 1905)
- 2006 - கே. ஷங்கர், தமிழ்த் திரைப்பட இயக்குனர் (பி. 1926)
- 2015 - கிஷோர், தமிழ்த் திரைப்படத் தொகுப்பாளர் (பி. 1978)

சிறப்பு நாள்

- கானா - விடுதலை நாள் (1957)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 60 | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 120 | 140 | 160 | 200 | 140 |
| தக்காளி | 60 | 40 | 40 | 40 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 70 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 30 | 40 | 20 | 30 | 60 | 60 | 40 |
| கரட் | 60 | 40 | 40 | 60 | 50 | 120 | 40 |
| பூசணி | 80 | 60 | 35 | 60 | 80 | 60 | 40 |
| புடோல் | 100 | 60 | 40 | 80 | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 100 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 100 | 100 | 90 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 150 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 160 | 80 | 160 | 150 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 50 | 50 | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 120 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 60 | 70 | 60 | 80 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 70 | 40 | 40 | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 90 | 100 | 120 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 400 | 300 | 400 | 600 | 200 |
| போஞ்சி | 140 | 120 | 60 | 80 | 100 | 160 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 | 40 | 40 | 30 | 40 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 20 | 30 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 80 | 80 | 120 | 100 |
| தேங்காய (ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 60 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 200 | 180 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 40 | 40 | 60 | 60 | 100 | 40 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 60 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60 | 60 | 60 | 60 |

> ஒரு முயற்சி எவ்வளவு கடினமானதாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் கடினமானது என்றால் இயலாது எனப் பொருளன்று.
>
> – ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## டெங்கு தரும் மரணம் பாவம் யாருக்கு?

டெங்குக் காய்ச்சலின் தாக்கம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. டெங்கு காய்ச்சலினால் அருமந்த இரண்டு உயிர்கள் யாழ்ப்பாணத்தில் பலியாகிப்போன செய்தி இதயத்தைக் கருக்குகிறது.

ஒரு இளம் தாய் டெங்கு காய்ச்சலினால் பலியாகியுள்ளார். இரண்டு குழந்தைகளின் தாய், தாயை இழந்த அந்த இரண்டு குழந்தைகளும் வாழுதல் என்பது எவ்வளவு கடினமானது.

இந்த உலகில் கொடியது இளம் வயதில் தாயை இழப்பதுதான்.

என் முன் கடவுள் தோன்றி அன்பனே! என்ன வரம் வேண்டும் கேள் என்றால் இளம் வயதில் தாயை இழக்காத வரத்தை இவ்வுலகுக்கு கொடு இறைவா என்றே கேட்பேன்.

தாயை இழந்து வாழுதல் மிகவும் கொடுமையானது. இருந்தும் டெங்குக் காய்ச்சலால் இரண்டு குழந்தைகளின் தாய் ஒருவர் மரணமான சம்பவம் வேதனைக்குரியது.

இதுபோன்று யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் 12 வயதுச் சிறுவன் ஒருவனும் டெங்குக் காய்ச்சலினால் உயிரிழந்துள்ளார்.

12 வயது பாலகனை திடீரென வந்த டெங்கு பறித்துச் சென்றது என்றால் அந்த இழப்பை – வேதனையை எங்ஙனம் தாங்கிக் கொள்ள முடியும்?

வாழ வேண்டிய பிள்ளையை காய்ச்சல் பறித்துச் சென்றது என்றால், நவீன மருத்துவத்தால் நமக்கு என்ன பயன் என்று கேட்பது நியாயமே.

எனினும் சுகம் என்பது ஒட்டுமொத்த சமூகத்துடன் சம்பந்தப்பட்டது. தனியொருவர் நினைத்து சுகத்தை ஏற்படுத்திவிட முடியாது.

மாறாக தனியன்கள் ஒவ்வொருவரும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் போது சுகம் தானாக ஏற்படுகிறது.

ஆம், சுற்றுப்புறச் சூழல் என்பது ஒட்டுமொத்த சமூகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இருந்தும் அதுபற்றி எங்களிடமான விழிப்புணர்வும் பொறுப்பும் போதுமானதல்ல.

என் வீட்டுக் குப்பையை வீதிகளிலும் மற்றையவர்களின் வீட்டு வாசல்களிலும் கொட்டி விட்டுப் போகின்ற கபடத்தனம் எங்களிடம் இருக்கும் வரை எங்களை தொற்றுநோய்கள் துரத்தவே செய்யும்.

டெங்குக் காய்ச்சல் தொடர்பில் சுகாதாரப் பகுதியினர் அவ்வப்போது வீட்டுத் தரிசிப்பை மேற்கொண்டு அறிவுரைகளை வழங்குகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான சூழலை வீடுகளில் வைத்திருந்தனர் என்ற குற்றத்துக்காக சிலருக்கு நீதிமன்றத் தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இருந்தும் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் இன்னமும் குறைந்தபாடில்லை. என்ன செய்வது! சமூகப்பொறுப்பு என்பது எங்களிடம் இல்லாமல் போயிற்று.

இதன் விளைவுதான் கடந்த சில தினங்களில் அருமந்த இரண்டு உயிர்கள் டெங்குக் காய்ச்சலுக்குப் பலியாகின.

ஓ! மக்கள் சமூகமே! அந்த இரண்டு உயிர்களும் டெங்குக் காய்ச்சலில் பலியாகின. ஆனால் அந்த டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்குரிய சூழலை ஏற்படுத்தியது நாமல்லவா?

அப்படியானால் எங்களின் பொறுப்பற்ற தன்மைகளே அந்த இளம்தாயின் மரணத்துக்கும் சிறுவனின் இறப்புக்கும் காரணமாகிறது.

ஆகையால் அந்தப் பாவம் நம் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமல்லவா?

ஆக, சமூகப் பொறுப்போடு நாம் நடந்து கொள்வோம். டெங்கு நுளம்புப் பெருக்கத்தை அடியோடு தடுப்போம். **இது நாம் செய்யும் பெரும் புண்ணியமாகும்.**

# ஜனாதிபதி இந்தோனேசியாவிலிருந்து திரும்பியதும் அமைச்சரவை மாற்றம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தோனேஷியப் பயணத்தைமுடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம் பெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி இந்தோனேஷியா செல்லவுள்ள நிலையில், அவர் நாளை மறுதினம் 8 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி அமைச்சரவையில் திருத்தம் ஒன்று மேற்கொள்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

நிதி, மீன்பிடி, மின்சக்தி, ஊடகம், சட்டம் மற்றும் ஒழுங்கு, நெடுஞ்சாலை மற்றும் துறைமுக அமைச்சுக்களில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் அமைச்சரவை திருத்தத்தை தாமதிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கை பொருளாதாரம் தொடர்பில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறு பிரதமர் கோரியுள்ளார்.

சமகால அரசாங்கத்திலுள்ள சில அமைச்சர்கள் தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டே அமைச்சரவை திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

## ஈழ அகதிகள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

தஞ்சக் கோரிக்கை விடுத்த 350ற்கும் மேற்பட்ட இலங்கை தமிழ் அகதிகள், இந்தோனேசியாவின் தற்காலிக அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக அங்குள்ள அகதிகள் போருக்கு பிறகும் இலங்கையில் தொடர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் காரணமாக படகுவழியே இந்தோனேசியா வந்தவர்கள் என சொல்லப்படுகின்றது.

இதில் பலருக்கு தஞ்சக் கோரிக்கை மறுக்கப்பட்டு இலங்கைக்கே திருப்பியனுப்பப்படும் சூழல் நிலவுவதாக தெரியவந்துள்ளது.

அப்படியான நிலையில். இந்தோனேசியாவின் மேடான் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் வசிக்கும் நான்கு குடும்பத்தினர் கடந்த ஐந்து நாட்களுக்கு மேலாக உண்ணாவிரதம் இருந்து வந்துள்ளனர்.

அவர்களின் உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## சாஸ்திரங்கள்

✦ உங்களுக்கு தீராத கடன் இருக்கிறதா? அது தீர ஒரு வழியுண்டு. அதாவது கிரகணம் பிடித்த காலத்தில் உங்களது கடனில் ஒரு சிறு பகுதியை திரும்பக் கொடுத்தீர்களேயானால் உங்களது முழுக்கடனும் வெகு விரைவில் தீர வழி பிறந்து விடும்.

-ஸ்காந்தம்

✦ கையில் பணமிருந்தும் பலருக்கு வீடு கிட்டாமல் தட்டிப் போய்விடுகிறது. செவ்வாய்தோறும் ஆறுமுகப் பெருமானுக்கு அரலிப் பூ மாலை சாற்றி ஆறு ஏழைக் குழந்தைகளுக்கு அன்னமிட்டு வந்தால் நல்ல விதத்தில் இல்லம் அமையும்.

-குருமங்கள கந்தர்வா

✦ தெய்வ வழிபாட்டின் போது உடைக்கும் தேங்காயினுள் பூ இருந்தால் வாழ்க்கை சுகமாகவும் சுமுகமாகவும் வெற்றியுடனும் இருக்கும் என மகிழலாம். அளவில் சிறிய பூ இருந்தால் கொடுக்கல் வாங்கலில் இருந்த சிக்கல் கடன் தீரும். பூ பெரியதாக இருந்தால் வீட்டில் பெண்களுக்கு நன்மை பிறக்கும். தேங்காய் மூடி முழுவதும் பூ இருந்தால் இழந்த செல்வம் தன்னால் தேடி வரும்.

-ஸ்ரீகாரணம்

✦ இறைவழிபாட்டில் தேங்காய் உடைக்கும்போது கைதவறி கீழே உடைந்து விட்டதென்றால் வீட்டில் கருவுற்றிருக்கும் பெண்ணின் கரு கலைந்து விடும்.

-ஸ்ரீகாரணம்

✦ உஷா என்றால் பகல். நிஷா என்றால் இரவு. நடு நிஷா (நள்ளிரவு) 12 மணி முகூர்த்தம் விசேடமானது. அதுபோல் நடு உச்சி (நண்பகல்) 12 மணி முகூர்த்தம் விசேடமானது. நள்ளிரவு 12 மணிக்கு திருமணம் செய்வதும் நண்பகல் 12 மணிக்கு தொழில் தொடங்குவதும் உத்தமம்.

-ஜோதிட கணிதாமிர்தம்

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

### வீடு வாசலை ஏன் அடித்துப் பெருக்குகிறோம்?

காலை வேளையில் வீட்டையும் வாசலையும் அடித்துப் பெருக்கி சுத்தப் படுத்த வேண்டும் என்பது ஆசாரம்.




தேவர்கள் பாற்கடலைக் கடைந்த போது அன்னை பகவதி பாற்கடலில் இருந்து தோன்றினாள். அப்போது அவளை வரவேற்க யாரும் தயாராக வில்லை. தனிமையில் இருந்த அவள் சிவபெருமானிடம் நான் எங்கே தங்குவேன் என்று கேட்டாள். அவளுக்குப் பதிலளித்த சிவபெருமான் அவள் எங்கெல்லாம் தங்கலாம் என்று பல இடங்களைச் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு சுட்டிக்காட்டிய இடங்களில் அடித்துப் பெருக்காத இடமும் உட்படும்.

அடித்துப் பெருக்கிச் சுத்தம் செய்யாத இடங்களில் பகவதி வாசம் செய்வாள். அந்தப் பகவதியை அவலட்சுமியாகக் கருதுகிறார்கள். அவள் இருக்கும் இடத்திற்கு லட்சுமிதேவி வருவதில்லை. லட்சுமி வரவேண்டுமென்றால் அதிகாலையில் அடித்துப் பெருக்கி சாணநீர் தெளிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் பகவதி அங்கிருந்து மறைந்து லட்சுமி குடியேறுவாள்.

ஐஸ்வர்ய தேவதையான லட்சுமி வாசம் செய்வதற்காகத்தான் வீடு வாசலை அடித்துப் பெருக்கி சுத்தம் செய்கிறோம். அவ்வாறு செய்யாதவர்கள் வீட்டில் மூதேவி குடியிருக்கும்.

சுத்தமும் ஐஸ்வர்யமும் நிலைத்து நிற்பதற்கு தினமும் இரண்டு நேரம் (காலை, மாலை) வீடு வாசலை அடித்துப் பெருக்கி சுத்தம் செய்ய வேண்டுமென்பது பழைய ஆசாரம்.

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் பாரதி வீதி, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், மாதகல், ஜம்புகோளப்பட்டிணம், காட்டுப்புலம், குசுமாந்துறை. ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில் உமணகிரி, நறுவிலிக்குளம், ஆவ ணம் வஞ்சியங்குளம், முதலைக்குத்தி பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வினைப்பயன்



கூர்ந்து பார்க்கின்ற போது ஒவ்வோரு செயலுக்கும் விளைவு இருக்கின்றது என்பது நிச்சயமாகப் புலனாகும். ஒருசில செயல்களுக்கு விளைவு விரைவில் தெரிவதில்லை. காரணம் என்னவென்றால் மனிதனுடைய ஆயுள் சொற்பம் - ஒரு குறிப்பிட்ட எல்லை உடையது. சில செயல்கள் நீண்ட காலத்திற்குப் பின் விளைவாக வரலாம். அது வரையிலே அறிவை நீட்டிப் பார்க்கவோ, வயதைக் கூட்டிப் போடவோ முடியாது.

அதனால் சாதாரண அறிவு நிலையில் மனிதன் ஒரு முனையை விட்டுவிட்டு ஒரு முனையை மட்டும் பிடித்துக் கொள்கின்றான். செயலை மட்டும் எடுத்துக் கொள்கிறான். விளைவே இல்லை என்று எண்ணுகின்றான் அல்லது விளைவை மட்டும் எடுத்துக் கொள்கின்றான். அதற்குரிய காரணம் பிடிபடவில்லையே என்று சொல்லுகின்றான். இவ்வாறு பகுதிப்படுத்தப்பட்ட நிலையிலே "வினைப் பயன்" என்பதே பொய்யான தத்துவம் என்று குறுகிய மனத்தாலே முடிவுகட்டிவிடுகின்றான்.

எந்தச் செயலைச் செய்தாலும் விதையைப் போட்டால் நான்கு நாட்களிலோ, நான்கு வாரங்களிலோ முளைப்பது போல, அந்தச் செயலுக்கு ஒரு விளைவு நிச்சயமாக உண்டு. பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் இந்த ஆறு குணங்கள் வயப்பட்டு மனிதன் செய்கின்ற செயல்களெல்லாம் அவனிடமே பதிந்து, பதிந்து, பதிந்து மீண்டும் அந்தச் சக்தி உந்தி எண்ண அலைகளாகவோ, செயல் வடிவங்களாகவோ வந்து கொண்டு தான் இருக்கும். அப்படியே வந்து விட்டால் அதே எண்ணப் பதிவுகள் மீண்டும் மீண்டும் பதிந்து எழுந்து செயல் வடிவம் பெற்றுக் கொண்டே இருப்பதால் மனிதன் துன்பவயப்படுகின்றான். அதிலிருந்து மீட்டுக் கொள்ள முடியாமல் தவிக்கிறான்.

# இறுதிப் போட்டியில் நேதாஜி



வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா 2017 இன் ஓர் அங்கமான உதைபந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது.

நடைபெற்ற A பிரிவு ஆட்டத்தில் றெயின்போ அணி சைனிங்ஸ் அணியை வெற்றி கொண்டும் (0:0 தண்ட உதை மூலம்) நேதாஜி அணி தீருவில் அணியை வெற்றி கொண்டும் (2:2 தண்ட உதைமூலம்) அரையிறுதிக்கு முன்னேறின.

அரையிறுதியில் நேதாஜி, றெயின்போ அணிகள் மோதின. முதல்பாதியில் இரு அணிகளும் சமபலத்தைக் காட்டின. கோல் எதுவும் இல்லை. இடை வேளையின் பின் எழுச்சி கண்ட நேதாஜி அணி அடுத்தடுத்து கோல்களைப் போட இறுதியில் 4:0 என வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (க)

# வல்வை வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி றேஞ்சர்ஸ் வெற்றி



வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 2017 றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடந்த ஆட்டத்தின் முடிவுகள்.

முதல் போட்டியில் சென்சேவியர் B அணி வருகைதராத காரணத்தால் சுடரொளி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இரண்டாவது போட்டியில் றேஞ்சர்ஸ் -B மற்றும் உடுப்பிட்டி யூத் அணிகள் மோதியது இப்போட்டியில் 4:2 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் -B அணி வெற்றியீட்டியது. (க)

# ரகுநாத்தின் அதிரடி கோல்

# அரையிறுதிக்கு த ரெட் கிங்ஸ்



இமையாணன் மத்தியின் சொக்கர் லீக் உதைபந்தாட்ட போட்டியில் ஏலியன் போயிஸ் அணியை எதிர்த்து விளையாடிய ரெட் கிங்ஸ்

ஆரம்பதில் ரகு அதிரடி கோலை போட்டு அசத்த பின்னர் அதே அணி சார்பாக காவியன் கோல் ஒன்றைப் போட இடைவேளை முடிவில் 02:00 என நிறைவடைய மீண்டும் ஏலியன் போய்ஸ் அணியின் தனுசன் நுட்பமான முறையில் தொடர்ந்து இரண்டு கோல்களைப்போட்டு அசத்தினார்.

போட்டி முடிவில் 02:02 சம நிலைபெற சமநிலை தவிர்ப்பின் மூலம் 04:03 என்ற அடிப்படையில் ரெட் கிங்ஸ் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தெரிவாகியது.

இதில் ஆட்டநாயகனாக ரெட்கிங்ஸ் வீரன் ரகுநாத் தெரிவானார். (க)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி லீக்கும் இணைந்ததான கழகங்களுக்கிடையிலான 7 நபர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில்வல் வை A அணியை எதிர்த்து கொலின்ஸ் B அணியும்

மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கர வை சுடர் அணியை எதிர்த்து கருணாகரன் அணி மோதவுள்ளது.(க)

# காலநிலை சீரின்மை காரணமாக இறுதிப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் Northern Challengers உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி மற்றும் மூன்றாம் இடத்திற்கான போட்டிகள் கால நிலை சீரின்மை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி போட்டி 4 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்தது.

இறுதிப் போட்டியில் யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும்

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜோசப் வாஸ் விளையாட்டுக் கழகமும் மோதவிருந்தது.

போட்டிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கெண்டுள்ளனர். (க)

# கூமாங்குளம் சுப்பர்ஸ்டார் விளையாட்டுக் கழகம் தேசிய ரீதியிலான கரப்பந்தாட்டத்திற்கு தெரிவு



வவுனியா மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 8 அணிகள் கொண்ட கரப்பந்தாட்ட போட்டியில் கூமாங்குளம் சுப்பர்ஸ்டார் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் முதல்நிலையில் வெற்றி பெற்று தேசிய ரீதியில் நடைபெற இருக்கும் கரப்பந்தாட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற இப்போட்டியை இளைஞர் கழகமும் ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இணைந்து நடத்தியுள்ளன.

இவர்கள் கிராமத்துக்கு மட்டுமல்லாது வவுனியா மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

அது மட்டுமல்லாது கடந்த வருடங்களுடன் இரண்டாவது தடவைகள் தேசிய போட்டிகளில் வவுனியா மாவட்ட ரீதியில் பங்கு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(க)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 2015 உயர்தர பிரிவு பழைய மாணவர்களினால் கிரிக்கெட் வலைப்பயிற்சியில் ப்ந்துவீச்சிற்கு பயன்படுத்தும் உபகரணமும் அதற்குரிய பந்துகளும் (03.03.2017) அன்று கல்லூரியில் வைத்து அதிபரிடம் வழங்கப்பட்டது. (க)

# வடக்கு, கிழக்கில் கல்வி அமைச்சு தனி அமைச்சு ஆக்கப்பட வேண்டும்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மாகாணங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் தொடர்ந்தும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றன. இதற்கு கல்வி அமைச்சோடு இதர துறை அமைச்சுக்களும் இணைந்து இருப்பது மூல காரணங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தியுள்ளதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மத்திய கல்வி அமைச்சு தனி ஒரு அமைச்சின் கீழும், உயர்கல்வி அமைச்சு தனியொரு அமைச்சின் கீழும் நிர்வகிக்கப்படுகின்றன.

ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி அமைச்சோடு கலாசாரம், பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரம் என்று பல துறைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் கல்வித்துறைசார் பணிகளுக்கு தனியான முக்கியத்துவம் கொடுக்கமுடியாதுள்ளது. கல்வி என்பது குழந்தைகளின் எதிர்காலம் என்பதற்கு அப்பால் மனித இனத்தின் விழுமியங்களோடு இணைந்த வாழ்க்கையின் முக்கிய அம்சமாகும்.

அதிலும் 40 ஆண்டுகளுக்கு மேலாக சீர்குலைந்துள்ள வட கிழக்கு மாகாணங்களின் கல்வியில் வீழ்ச்சி என்பது இனிமேலும் வரக்கூடாது. உலகமயமாக்கலில் இருந்து எமது குழந்தைகள் விலகிச் செல்வது மட்டுமன்றி உயர்வான கல்விப் பாரம்பரியத்தை மறந்து உதவாக்கரைகளாக மாறிவருவதாக பலரும் குறைகூறி வருகின்றனர்.

ஆகையால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி அமைச்சானது தனியொரு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு, மாணவர்களின் கல்வியில் அதீத கவனம் செலுத்தி, கல்வியால் உயர்ந்த நாடுகளின் கல்விக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு எமது மாகாணம் முன்னிலைபெறவேண்டும்.

இதனை இரண்டு மாகாணங்களின் முதலமைச்சர்களும் சிந்தித்து தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோளை விடுக்கின்றதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## மக்களை ஏமாற்று...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் வருடாந்த தேசிய மாநாடும் பொதுக்கூட்டமும் நேற்றைய தினம் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை தமிழ் மக்களுக்கு துரோகம் செய்கிறது, ஒற்றையாட்சிக்கு இணங்கியுள்ளார்கள், தமிழ் அரசியலில் இருந்து தேசிய வாதத்தை நீக்க முடிவெடுத்துள்ளார்கள் என அன்று நாம் கூறிய போது எம்மை துரோகியாக பார்க்கும் நிலை இருந்தது. ஆனால் தமிழ் தேசம் முழுவதும் எமது கருத்தை கூறினால் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு நிலைமை இன்று மாறியுள்ளது.

தமிழ் தேசத்தை உயிருடன் வைத்திருக்க வேண்டும் எனத்தொடங்கிய இப்பாதை இன்று எழுக தமிழ மூலம் தமிழ் தேசத்தை மக்கள் உச்சரிக்கும் நிலைக்கு வளர்ந்துள்ளது.

தேசம் என்று உரைப்பது வெறும் கோஷம் என எதிரிகள் நினைக்கிறார்கள். யாழ் மண் இப்போது ஓரளவேனும் பாதுகாக்கப்பட்ட பிரதேசம் ஆனால் ஏனைய பிரதேசத்துக்கு சென்றால் எமது தேசம், என்பதன் பொருள் அனைத்து மக்கள் மட்டத்திலும் உச்சரிக்கும் விடயமாக உள்ளது. யாழ் மக்களை வைத்து அந்த வார்த்தையின் பெறுமதியை கணக்கு போட முடியாது.

இலட்சக்கணக்கான மக்கள் எந்த கொள்கைக்காகவும் இருப்புக்காகவும் அடையாளாத்துக்காகவும் தமது உயிர்களை தியாகம் செய்தார்களோ அந்த இலட்சியத்தை உயிருடன் வைத்திருக்க பாடுபடுவது தமிழ் தேசிய மக்கள் முன்னணியே ஆகும்.

தேர்தல் காலத்தில் மட்டும் சுயநிர்ணயம், சமஷ்டி என கூறி விட்டு அதன் விளக்கங்களை மக்கள் மத்தியில் பரப்பாமல் தமிழ் தலைமைகள் ஏமாற்றி வருகிறார்கள். அரசியல் தீர்வு என்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் பொறுப்பு கூறல் என்பதும் மிக முக்கியம்

பொறுப்பு கூறல் சரியான முறையில் இடம்பெற்று நாம் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு எட்டினால் தான் நாம் தொடர்ந்து போராடாத நிலையை ஏற்படுத்தி எமது எதிர்கால சந்ததியினர் போராடாமல் நிம்மதியான வாழ்க்கை வாழ வழிசமைக்க முடியும்.

ஐ.நா பேரவையில் நிறைவேற்றும் தீர்மானம் என்பது ஒரு நாடகம் தமிழ் மக்களுக்கு நீதி கொடுக்கும் விடயம் இல்லை. என 2012இல் இருந்து கூறி வருகிறோம் அது இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு உண்மையை வெளிக்காட்டுவது தமிழ் தலைமைகள் இல்லை சிங்கள தலைமைகள் தான் மக்களை ஏமாற்றி மோசமான பாதைக்கு கொண்டு செல்லும் ஏமாற்றங்களை ஒவ்வொரு செயற்பாட்டின் மூலம் நிரூபிப்பது சிங்கள தேசவாதமே

இலங்கைக்கு மேலும் 2 வருட கால அவகாசத்துக்கான முயற்சிகள் முடிவடைந்துள்ளன. அதற்கு உண்மையில் பாடுபட்டவர்கள தமிழ் தலைமைகள் தான் ஐ.நா பேரவையில் 2015ஆம் ஆண்டு இணைந்து நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தயார் இல்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்து வருகிறது. இதற்கு பின்னரும் எமது தலைவர் என கூறுபவர்கள் கால அவகாசம் கொடுக்க இணங்கியுள்ளார்கள்.

த.தே.கூட்டமைப்பில் உள்ள 16 உறுப்பினர்களில் 11 உறுப்பினர்கள் இணைந்து இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்க கூடாது என தெரிவித்துள்ளார்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் கால அவகாசம் கொடுக்க முடியாது என தெரிவித்திருப்பது சர்வதேச மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது. சர்வதேச சமூகம் தலைவர்களின் கருத்தை தான் ஏற்றுக்கொள்ளும் ஆகவே இவ்வாறான ஏமாற்று தலைமைகளும் அவர்களுடன் இணைந்தவர்களும் தொடர்ந்து அந்த அமைப்பின் பதவியில் இருக்க முடியாது.

த.தே.கூட்டமைப்பில் உள்ள ஏனைய உறுப்பினர்கள், உண்மையில் இலங்கைக்கு கால அவகாசம் கொடுப்பதை விரும்பவில்லை என்றால் கால அவகாசம் கொடுக்க முனைகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர், பேச்சாளர் மற்றும் அவர்களுடன் சேர்ந்திருப்பவர்களை அந்த அமைப்பை விட்டு தூக்கி எறிய வேண்டும். அதை செய்யாமல் வெறுமனே கையெழுத்திட்டு இனத்துக்கு நன்மை செய்யப்போவதில்லை.

அத்துடன் மக்கள் மத்தியில் அரசியல் தீர்வு தொடர்பாக மட்டும் விளக்கம் இருந்தால் போதாது அத்துடன் பொறுப்புக் கூறல் தொடர்பிலும் ஆழமான தெளிவு வேண்டும். எமது மக்களுக்கான இலட்சியத்தை அடைய எழுக தமிழ் ஒரு திருப்புமுனையாகவுள்ளது. தமிழ் தேசத்தின் அங்கிகாரத்தை எமது இனம் அடைந்தே தீரும் எம்மை அழிக்க நினைப்பவர்களால் எம்மை அழிக்க முடியாது என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (செ)

## அரச கட்டுப்பாட்...

சந்தித்து கலந்துரையாடுகையில் அவர் இத னைக் கூறியுள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் சகல தரப்பினரதும் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் சைட்டம் பிரச்சினை தொடர்பில் தெளிவான தீர்மானத்துக்கு வரவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ)

## 'முற்றுப் புள்ளியா'...

தளமாகக் கொண்ட படத் தயாரிப்பாளரான Sherine Xavier என்ற பெண் இயக்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த இயக்குநர், கருத்து வெளியிடுகையில்,

இந்த படத்தை திரையிடுவதால் இலங்கையின் அச்சுறுத்துலுகக முகங்கொடுக்க நேரிடும்.

2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவடைந்தப் பின்னர், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தன் கணவனைத் தேடி மூன்று பிள்ளைகளுடன் போராட்டத்தில் ஈடுபடும் பெண் தொடர்பான கதையே முற்றுப் புள்ளியா என திரைப்படமாக்கப்பட்டுள்ளது.

இந்த படம் தொடர்பான படப்பிடிப்பு 2014-ம் ஆண்டு ஜூலை மற்றும் ஒக்டோபர் மாதங்களில் தமிழ்நாடு, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய பகுதிகளில் இடம்பெற்றது.

2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் குறித்த திரைப்படத்தில் படப்பிடிப்புகள் நிறைவுக்கு வந்தது.

வெற்றிகரமாக படத்தை இயக்கிய பின்னரும், பட தணிக்கையின் போது பல தடைகளை எதிர்கொண்டேன்.

தற்போது தணிக்கை நிறைவுக்கு வந்துள்ளமையால் குறித்த திரைப்படத்தை இந்தியாவில் திரையிட விரும்புகின்றேன்.

இது தமிழர்களின் கதை எனவே, தமிழ் நாட்டில் திரையிட வேண்டும்,

படத்தின் கலாசார முக்கியத்துவம் தொடர்பில் புரிந்து கொள்ளும் ஒரு விநியோகஸ்தர் இந்த படத்தை திரையிட முன் வர வேண்டும் என்று தான் விரும்புகின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த படத்தை திரையிடுவதற்காக மும்பை சென்று போது Sherine Xavier இந்த தகவல்களை வெளியிட்டார்.

இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதி ஒரு கண்ணாடி என்றும், உண்மையை மட்டுமே திரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# நெல் உற்பத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடுகள்

## விவசாய காப்புறுதிச் சபை தலைவர் தெரிவிப்பு

பெரும் போகத்தில் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடுகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விவசாய காப்புறுதிச் சபையின் தலைவர் சிட்னி கஜநாயக்க தெரிவிக்கையில்,

உற்பத்திக்காக செலவிடப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு பகுதி தொகை செலுத்தப்படுவது வழமையான நடைமுறையாகும். இருந்த போதிலும், ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக அடுத்த போக நெல் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் வரையில் 4 மாத காலப்பகுதிக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் விவசாயிகளுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

நெல் உற்பத்திக்கு மேலதிகமாக ஏனைய ஊடுபயிர், தேயிலை, கறுவா, மிளகு போன்ற உற்பத்திகளுக்கும் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள முடியும். இதனால் விவசாயிகள் தமது உற்பத்திக் காணியை காப்புறுதி செய்வதில் ஆர்வம் செலுத்த வேண்டுமென்றும் விவசாய காப்புறுதிச் சபையின் தலைவர் சிட்னி கஜநாயக்க விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

பெரும் போகத்தில் உற்பத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்டஈடுகள் குறித்து மேலும் தெரிவிக்கையில், அனைத்து விவசாயிகளின் வங்கிக் கணக்குத் தொடர்பான தகவல்கள் விவசாயப் பாதுகாப்புச் சபையிடம் உண்டு. இவற்றை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் பாதிப்பிற்கான முழுமையான தொகை வைப்பீடு செய்யப்படும் என்றார்.

மேலும் இவ்வாறான நடைமுறையை முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில், அரசியல்வாதிகள் தமது கட்சிகளின் குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக விவசாயிகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

## 24 மணித்தியாலங்களுக்குள்

# பல்வேறு விபத்துக்களில் 6 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வீதியில் கவனவனத்துடன் வாகனம் செலுத்துவதால் தினமும் பல மனித உயிரிழப்புக்கள் நாட்டில் பதிவாகின்றன. இதில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவிலிருந்து நேற்று இரவு 7 மணிவரையான 24 மணித்தியாலங்களில் நாட்டின் சில பகுதிகளில் பதிவான வாகன விபத்துக்களில் 6 பேரின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. உயிரிழந்தவர்களில் கர்ப்பிணித் தாயொருவரும் அடங்குகின்றார்.

நேற்றுமுன்தினம் ஏழு மணியளவில் அவிசாவளை -நீர்கொழும்பு பிரதான வீதியின் அமிதிரிகல எரெந்தெனிய பகுதியில் தனியார் பஸ்ஸும் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் மூவர் உயிரிழந்தனர்.

விபத்துக்குள்ளான வானில் 9 பேர் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த ஆறு பேர் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், கவலைக்கிடமான நிலையிலிருந்த பெண்கள் இருவர் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் கந்தளாய் -திருகோணமலை பிரதான வீதியின் பாலம்போட்டாறு பகுதியில் மற்றுமொரு விபத்து பதிவானது.

திருகோணமலையிலிருந்து கந்தளாய் நோக்கி நெல் அறுவடை இயந்திரத்தை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம், முன்னாள் வந்த சிறிய ரக லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது. சிறியரக லொறியில் பயணித்த 16 பேர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று அதிகாலை 3.30 அளவில் ஹிக்கடுவை - திரானகம பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்தார்.

காலியிலிருந்து - ஹிக்கடுவை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி மதில் சுவருடம் மோதி விபத்துக்குள்ளானது.

முச்சக்கரவண்டியில் நால்வர் பயணித்துள்ளதுடன், இதில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, கஹட்டகஸ்திகிலிய- மெக்கிச்சாவ பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் 11 வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ளார். தனது தாயுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தர்ப்பத்தில், பின்னால் வந்த வாகனமொன்று மோதியதில் சிறுவன் உயிரிழந்துள்ளார்

விபத்தில் படுகாயமடைந்த சிறுவனின் தாய் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று முற்பகல் இடம்பெற்ற மற்றுமொரு வாகன விபத்தில் பண்டாரவளை எத்தல பிடிய பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணித் தாயொ ருவர் உயிரிழந்தார்.

தனது பிள்ளையுடன் சந்தைக்குச் சென்று வீடு திரும்பிய இவர் காரை நிறுத்துவதற்கு முயன்றபோது அது 150 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த பிள்ளை பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ)

## புலிகளின்...

துப்பாக்கிகளே பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது பாரதூரமான விடயமாகும்.

எனவே, பாதாள உலக குழுக்களை அடக்க எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக எடுக்க வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை பகுதியில் கடந்த 27ஆம் திகதி காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பாதாள உலகக் குழு தலைவர் ஒருவர் உட்பட 7 பேர் பலியாகியிருந்ததுடன் பலர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## செப்டெம்பரில்...

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அரசாங்கத்தை வீட்டுக்கனுப்பிவிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

அதற்கான வேலைத்திட்டங்கள் அனைத்தும் உரிய முறையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்சா தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் எதிர்காலத் திட்டம் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## பொறியில் சிக்...

ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர் ஆகஸ்ட் 17-ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் வரை 8 மாதங்கள் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையில்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டே அரசாங்கத்தின் ஆட்சி நடத்தப்பட்டது என்பது இரகசியமான விடயமல்ல.

எனினும் நாடாளுமன்றத்தில் தமக்கு சார்பாக பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷ அந்த காலப்பகுதியில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வர நடவடிக்கை எடுக்காதது ஆச்சரியத்திற்குரிய விடயம்.

தற்போதைய ஜனாதிபதியின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவான மகிந்த ராஜபக்ஷ பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிக்காது ஒதுங்கி கொள்கிறார்.

குறைந்தது வரவு செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பில் கூட அவர் கலந்து கொள்ளவில்லை. மகிந்த ராஜபக்ஷ ஒரு அரசியல் பொறியில் சிக்கியிருப்பதையே இவை காட்டுகின்றன.

சைட்டம் பிரச்சினை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது வேறு விதமாக பேசி வருகிறார். சைட்டம் நிறுவனத்தை ஆரம்பிக்க மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போதே மில்லியன் கணக்கான நிதி வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

எனினும் தற்போது அதற்கு எதிராக பேசி வருகிறார். தமது அரசியல் பலத்தை விரிவுப்படுத்த முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது அரசியல் ஆதவாளர்கள் அரசியல் குத்துக்கரணம் அடிப்பதை கண்டிக்க வேண்டும்.

கோடிக்கணக்கில் அதிகமான் வட்டியில் பணத்தை பெற்று அம்பாந்தோட்டை விமான நிலையம் மற்றும் துறைமுகம் போன்ற பொருளாதார பிரதிபலன்கள் இல்லாத திட்டங்களை உருவாக்கிய முன்னாள் ஜனாதிபதி அவற்றை பலன் தரும் முதலீட்டு வலயங்களாக நாம் மாற்ற முயற்சிக்குழ் போது எதிர்ப்பை வெளியிட்டு அரசியல் குத்துக்கரணம் அடிப்பது இதற்கு சிறந்த உதாரணம் எனவும் நிரோஷன் பெரேரா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (செ)

## சாரதி மீது வாள்...

இரவு 7.30 மணியளவில் சாவகச்சேரி சிறைச்சாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுதாரிகளாலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் கல்வியங்காட்டை சேர்ந்த கோவிந்தன் ஜெயரூபன் (வயது27) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

## கேப்பாப்பிலவு...

நாமோ மாதிரிகிராமம் என்னும் போர்வையில் அகதி முகாமில் வாழ்ந்து வருகின்றோம்.

எமது சொந்த மண்ணில் என்ன வளம் இல்லை! ஏன் இப்படி எம்மை இந்த அரசும் இராணுவம் நடத்துகின்றது?. இதனால் இவர்களுக்கு என்ன இலாபம்? நாம் தனி நாட்டை கேட்கவில்லை. எமது சொந்த மண்ணையே கேட்கின்றோம்.

எமது நிலங்கள் விடுவிக்கப்படும்வரை இந்த வீதியில் கிடந்து மாண்டு போவமே தவிர சற்றும் நகர மாட்டோம் என நேற்று 5வது நாளாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ள கேப்பாப்பிலவு பூர்வீக கிராம மக்கள் உறுதியாக தெரிவித்துள்ளனர்.

5வது நாளான நேற்றையதினம் அருட் சகோதரிகள் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் மக்களை சந்தித்து தமது ஆதரவினை வெளியிட்டனர்.

அத்தோடு நாலாவது நாளான நேற்று முன்தினம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மக்களை சந்தித்து தனது ஆதரவினை தெரிவித்திருந்தார்.

இதேவேளை நேற்றையதினமும் தமது சொந்த நிலங்களுக்கு செல்லவேண்டும் என்ற ஆவலில் உள்ள கேப்பாப்பிலவின் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இணைந்து தமது நிலங்களை விடுவியுங்கள் என கோசம் எழுப்பி இராணுவ படை தலைமையக வாயில் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

கேப்பாப்பிலவு கிராம சேவகர் பிரிவில் கேப்பாப்பிலவு பூர்வீக கிராமம், சீனியா மோட்டை, பிலவுக்குடியிருப்பு, சூரிபுரம் போன்ற கிராமங்கள் காணப்படுகின்ற நிலையில் இதில் அனைத்து கிராமங்களிலும் இராணுவம் நிலைகொண்டுள்ளதோடு கேப்பாப்பிலவு பூர்வீக கிராமம் தவிர்ந்த ஏனைய அனைத்து கிராமங்களிலும் பெருமளவான பகுதிகள் இராணுவத்தால் ஏற்கெனவே விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கேப்பாப்பிலவு பூர்வீக கிராமத்தில் பிரதான வீதியை மறித்து குடியிருப்பு காணிகள், வீடுகள், பாடசாலை, வணக்கஸ்தலங்கள், விளையாட்டு மைதானங்கள், தோட்ட நிலங்கள், வயல் நிலங்கள் என அனைத்தையும் கையகப்படுத்தி 480 ஏக்கருக்கு மேலான மக்களின் நிலங்களில் 10க்கும் மேற்பட்ட இராணுவத்தின் பிரதான படைப்பிரிவுகளை அமைத்து பல இராணுவ முகாம்களை அங்கு இராணுவம் அமைத்துள்ளது.

இந்த நிலையில் தமது சொந்த நிலங்களை விடுவிக்குமாறு கோரி கடந்த 8 வருடங்களாக கேப்பாப்பிலவு பூர்வீக கிராம மக்கள் பல வடிவங்களில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் பலமுறை ஏமாற்றப்பட்ட இந்த மக்கள் ஆற்றாத நிலையில் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை தற்போது முன்னெடுத்துள்ளனர். (செ)


KINGS ELECTRONICS(PVT) LTD
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
SPECIAL OFFERS
LED TV'S
Samsung 32" -29900
Hisence 32" -24500
Sony 40" -64900
Hisence 24" -17900
Tcl 32" -21900
Panasonic 32" -28500
WARRANTY 3 YEARS



அழகிய, அதிநவீன தரத்தோடு
மின் உபகரணங்கள், தளபாடங்கள்,
மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்
INNOVEX WASHING MACHINE
FIVE YEARS WARRANTY
34500/=




SAMSUNG R19
REFRIGERATOR
34900/=
WARRANTY 10 YEARS



SONY DVD Player
ONE YEAR WARRANTY
PRICE
RS 5,250/=




Furnitures
Toys
Electronics
Baby Care
Glass TV Stand
9200/=



WEB: WWW.MYKINGS.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
(சி-7727)

Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
2D-Drawing 3D-Modeling
Auto CAD
Lecturer By:Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D-Drawing&3D-Modeling)
University of Peratheniya.
Cert.in Auto CAD(Advance 3D-Modeling)
University of Moratuwa.
Cert.in Auto CAD(2D-Drawing&3D-Modeling)
Open University of Sri Lanka.
Cert.in Auto CAD(2D-&3D)(1stClass)
University of Colombo.
Link:
077-5116320
071-8617972
[Civil & Mechanical]

ANANDA HOMES AND CONSTRUCTIONS யாழ்ப்பாணம்
உங்கள் இல்லத்தை தரமாக அமைத்துத்தர
01. சாதாரண வீடு - 19 இலட்சத்திலிருந்து
தொடங்குவதற்கு 5 இலட்சம்
(3 அறை, கோல், சமையலறை உட்பட)
02. மாடி வீடு - 35 இலட்சத்திலிருந்து
தொடங்குவதற்கு 10 இலட்சம்
(4 அறை, கோல், சமையலறை உட்பட)
03. நவீன இணைந்த குளியலறை - 11/2 இலட்சத்திலிருந்து
04. பழைய வீடு புனரமைப்புச் செய்தல்.
05. கடை, கட்டடத் தொகுதி அமைத்தல்.
06. சுற்று மதில் அமைத்தல்.





குறிப்பு: 1. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
2. Labour Contract முறையிலும் செய்து தரப்படும்.
3. Tile வேலைகள், கூரை வேலைகள்,
தச்சுவேலைகள் செய்யப்படும்.
அழையுங்கள் : ஆனந்தன்
தொ.பே : 078 615 5929, 021 320 5939
(8123)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

V2 TRAVELS
தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி



சிங்கப்பூர் 1 பவுண்
அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152
சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி
இவர் 13-01-2017 அன்று
எமக்கூடாக 1கிலோ பொதி
ஜெர்மனிக்கு அனுப்பினார்
நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: 0768226240
(சி-7707)

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கில்கள் வெல்லும் வாய்ப்பு
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்.
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை



(C-7736)
365 நாட்களும்
72 மணி நேரத்தில்
(Express Service)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு
(Door to Door Service)
DHL aramex FedEx SKYNET
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
Call 021 222 3536
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.